வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

விலை ரூ. 20/=

ஈழநாடு
Eelanadu




Email : news@eelanadu.lk | மலர் : 01 | 17.07.2021 சனிக்கிழமை | இதழ் : 226 | பக்கங்கள் : 16

## ஆசிரியர்களின் தொடர் போராட்டங்களையடுத்து

# ஜோசப் உள்ளிட்ட 16 பேர் விடுவிப்பு



யாழ்ப்பாணம், ஜூலை 17

ஆசிரியர் தொழிற்சங்கங்களின் போராட்டங்களையடுத்து கேப்பாப்பிலவு விமானப் படை முகாமில் வலுக்கட்டாயமாகத் தனிமைப்படுத்தப்பட்டிருந்த இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலின் உள்ளிட்ட 16 பேர் தனிமைப்படுத்தலில் இருந்து நேற்று மாலை விடுவிக்கப்பட்டனர். 15

## கிளிநொச்சியில் ஒருபகுதி முடக்கம்!

கிளிநொச்சி, ஜூலை 17

கிளிநொச்சி - வட்டக்கச்சி - கட்சன் வீதி பகுதி நேற்றுடன் முடக்கப்பட்டது.

இந்தப் பகுதியில் நேற்று 10 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டனர். இதையடுத்தே சுமார் 300இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழும் இந்த பகுதி உடன் நடைமுறைக்கு வரும் வகையில் முடக்கப்பட்டது.

அடுத்த இரு வாரங்களுக்கு இந்தப் பகுதி தனிமைப்படுத்தப்பட்டிருக்கும் என்று கிளிநொச்சி மாவட்ட சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர். (ஐ)

## யாழ்ப்பாணத்தில் 9 மாத குழந்தை தொற்றுக்கு பலி!

யாழ்ப்பாணம், ஜூலை 17

யாழ்ப்பாணத்தில் 9 மாதமேயான பெண் குழந்தை ஒன்று கொரோனா தொற்றால் உயிரிழந்தது.

யாழ்ப்பாணம் மாநகர சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவைச் சேர்ந்த - யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்த குழந்தையே இவ்வாறு தொற்றால் உயிரிழந்தது.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் ஆய்வுகூட அறிக்கையிலேயே இந்தத் தகவல் வெளியானது.

யாழ்ப்பாணத்தில் கொரோனா தொற்றால் முதன்முறையாக குழந்தை ஒன்று உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## கொரோனா தொற்றால் மேலும் 41 பேர் உயிரிழப்பு

கொழும்பு, ஜூலை 17

நாட்டில் மேலும் 41 பேர் கொரோனாத் தொற்றால் மரணித்தனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் உறுதிப்படுத்தலுடன் அரச தகவல் திணைக்களம் நேற்றிரவு விடுத்துள்ள அறிக்கையில் இந்த தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

இதற்கமைய நாட்டில் இதுவரையில் பதிவாகியுள்ள கொரோனா மரணங்களின் மொத்த எண்ணிக்கை 3 ஆயிரத்து 702 15

## 1,517 பேருக்கு நேற்று கொரோனா தொற்று

### 71 பேர் வெளிநாடுகளிலிருந்து வந்தவர்கள்

கொழும்பு, ஜூலை 17

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 1,517 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

இவர்களில் 71 பேர் வெளிநாடுகளிலிருந்து வருகை தந்து தனிமைப் படுத்தலுக்குள்ளாகி வந்தவர் 15

## அவசர கால பயன்பாட்டுக்காக சினோவக் தடுப்பூசிக்கு அனுமதி!

கொழும்பு, ஜூலை 17

அவசரகால பயன்பாட்டுக்காக சீனாவின் மற்றொரு தடுப்பூசியான 'சினோவக்'கிற்கு தேசிய மருந்துகள் ஒழுங்குமுறை ஆணையம் ஒப்புதல் அளித்துள்ளது.

சினோவக் தடுப்பூசி ஏற்கனவே உலக சுகாதார ஸ்தாபனத்தால் அவசரகால பயன்பாட்டுக்காக அங்கீகாரம் அளிக்கப் 15

### போதைக்கு அடிமையான சகோதரர்கள்

## திருத்துவதற்காக மறுவாழ்வுக்கு அனுப்பி வைத்தார் யாழ். நீதிவான்!

யாழ்ப்பாணம், ஜூலை 17

போதைக்கு அடிமையான சகோதர்களை மறுவாழ்வுக்கு அனுப்பி வைக்க உத்தரவிட்டார் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்ற நீதிவான் ஏ.பீற்றர் போல் கட்டளையிட்டார்.

ஆனைக்கோட்டை - ஆறுகால்மடம் பகுதியை சேர்ந்த 21 மற்றும் 19 வயதுடைய சகோதரர்கள் போதைப்பொருளை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் யாழ்ப்பாணம் பொலிஸா 15

## யாழில் 33 பேர் உட்பட வடக்கில் 50 தொற்றாளர்!

யாழ்ப்பாணம், ஜூலை 17

யாழ்ப்பாணத்தில் 33 பேர் உட்பட வடக்கு மாகாணத்தில் 50 பேர் நேற்று கொரோனா தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டனர்.

யாழ். போதனா மருத்துவமனை ஆய்வுகூடம், யாழ். பல்கலைக்கழக ஆய்வுகூடம் மற்றும் அன்ரிஜென் பரிசோதனைகளிலேயே இந்தத் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டனர்.

யாழ். போதனா மருத்துவமனை ஆய்வுகூடத்தில் நேற்றைய தினம் 524 பேரின் மாதிரிகள் பி. சி. ஆர். பரி 15

## வடமராட்சி கடலில் நேற்று கஞ்சாவுடன் மூவர் கைது!

வடமராட்சி, ஜூலை 17

வடமராட்சியில் 103 கிலோ கஞ்சாவுடன் மூவரை கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை வேளை கற்கோவளம் - மணல்காட்டுக்கு இடைப்பட்ட கடல் பகுதியில் சந்தேகத் 15

### கொரோனா பரவல் ஆபத்தால்

## மாகாணங்களுக்கிடையிலான போக்குவரத்து இடைநிறுத்தம்

கொழும்பு, ஜூலை 17

மாகாணங்களுக்கிடையிலான பஸ் மற்றும் ரயில் சேவைகள் இன்று முதல் இடைநிறுத்தப்படுவதாக போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார்.

இதன்படி இன்று முதல் எதிர்வரும் ஓகஸ்ட் முதலாம் திகதி வரை மாகாணங்களுக்கிடையிலான பஸ் மற்றும் ரயில் சேவைகள் 15

## 18 வயதுக்கு மேற்பட்டோருக்கு இராணுவ பயிற்சி அவசியம்

### மீண்டும் வலியுறுத்துகின்றார் வீரசேகர

கொழும்பு, ஜூலை 17

ஒழுக்கமான சமூகத்தை உருவாக்குவதற்காக 18 வயதுக்கு மேற்பட்டோருக்கு இராணுவ முகாம்களில் பயிற்சிகளை வழங்க வேண்டும் என்று பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

பாணந்துறையில் அலுபோமுல்ல மற்றும் ஹிரண பொலிஸ் நிலையங்களைத் திறந்துவைக்கும் 15

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

# இப்படியும் நடக்கிறது...!

அந்தக் காலத்தில் வண்டில் மாடுகள்தான் பிரதான வாகனங்கள். தோட்டங்களை - வயல்களை உழுவதற்கும் அந்த மாடுகள்தான். கலப்பையை இழுத்து உழுது செப்பனிட அவை உதவும்.

இதேபோல அதே மாடுகள் வண்டில்களில் மக்கள் ஊர்களுக்கு பயணம் செய்வதற்கும் பயன்படுத்தப்படும். இரண்டு மாடுகளை வண்டில்களில் பூட்டி அவற்றின் நாணயக்கயிறுகள் இரண்டையும் வண்டி ஓட்டுபவர் பிடித்து வைத்திருப்பார். ஒரு பக்கம் திரும்பவேண்டும் என்றால் அந்தப் பக்கத்து மாட்டின் கயிற்றை இழுத்துப் பிடிக்க அவர் நகர முடியாமல் நிற்க மற்றயவர் மாத்திரம் முன்னோக்கி நகர வண்டில் திரும்பிவிடும்.

சின்னமடு, பெரியமடுத் திருவிழாக்களில், செல்வச் சந்நிதி ஆலய திருவிழாக்காலங்களில் வரிசைகட்டி பல்வேறு ஊர்களிலும் இருந்து மாட்டு வண்டில்கள் பயணிப்பதே ஒரு கண்கொள்ளாக்காட்சியாக இருக்கும்.

சில தோட்டக்காரர்களின் மாட்டு வண்டில்கள் தினமும் வீட்டுக்கும் தோட்டத்துக்குமே சென்று பழக்கப் பட்டவையாக இருக்கும். அவ்வாறான மாட்டு வண்டில்களில் ஏறி அமர்ந்தால் தோட்டக்காரர் வண்டியை ஓட்டவேண்டிய தேவையே இருக்காது.

அவை தானாக தனது தோட்டங்களைச் சென்றடைந்து விடும். அந்தளவிற்கு அவை பழக்கப்பட்டு விட்டவையாக மாறிவிடும். இந்த மாட்டுவண்டிச் சமாச்சரத்தை இவ்வளவு விவரமாக எழுதவேண்டியிருக்கிறது. ஏனெனில், இன்றைய பல இளைஞர்களுக்கு இவை புரியாத விடயங்களாக இருக்கும்.

வீடுகளில் அந்தக் காலத்தில் வீட்டு வளவில் ஓர் ஓரமாகத்தான் மலசலகூடங்களை அமைத்திருப்பர்கள். சில கிராமங்களில் பத்து பரப்பு காணியில் வீடு முன்புறமும் மலசலகூடம் பின்புறமும் இருக்கும்.

இப்போதெல்லாம் நமது இளைஞர்கள் அதுபோன்ற வீடுகளில் மலசலகூடத்திற்கு செல்வதற்கும் மோட்டார் சைக்கிள்களை எடுத்துச் செல்கிறார்கள் என்று அண்மையில் ஒரு வயோதிபர் கூறி எங்களைச் சிரிக்க வைத்தார்.

இந்த விடயங்களை விலாவாரியாக எழுதுவதற்கு காரணம் வேறு ஒன்றுமல்ல, இன்று காலை அலுவலகத்திற்கு வரும்போது பாரிய விபத்து ஒன்று தெய்வாதீனமாக தவிர்க்கப்பட்டு விட்டது.

இந்த ஊர்க்குருவி பயணித்த வாகனத்தை ஓட்டிக் கொண்டிருந்தவர் ஒரு தென்பகுதியைச் சேர்ந்த நண்பர். நாங்கள் ஒரு பிரதான வீதியூடாக சற்று வேகமாகவே வந்துகொண்டிருந்தோம். திடீரென்று ஒரு குச்சொழுங்கையால் வந்த மோட்டார் சைக்கிள் ஒன்று எந்தவித தயக்கமும் இல்லாமல் பிரதான வீதியில் ஏறி குறுக்காக வேகமாக சென்றுகொண்டிருந்தது.

ஒரு பிரதான வீதியில் ஏறி திரும்பப் போகின்றோமே என்ற எந்தவித சலனமும் இன்றி சர்வ சாதாரணமாக மோட்டார் சைக்கிகளை ஓட்டிக்கொண்டிருந்தார் ஒருவர். அதுவும் ஓர் இளம் பெண்.

எமது வாகனத்தை ஓட்டிக்கொண்டிருந்தவர் சற்று சமயோசிதமாக நடந்துகொண்டதால் பாரிய விபத்து தவிர்க்கப்பட்டது.

வாகனத்தை ஓட்டிக்கொண்டிருந்த நண்பர் கேட்டார், "என்ன சேர் இது. யாழ்ப்பாணத்திலை எப்படி எல்லாம் வாகனங்களை ஓட்டுகிறார்கள். கொஞ்சம் கூட பொறுப்புணர்வு இல்லாமல்....." என்றார்.

"அது அவர்களின் தவறு அல்ல. முப்பது வருடங்கள் யாழ்ப்பாணத்தில் வாகனங்கள் இருக்கவில்லை. ஒரு சில நூறு வாகனங்கள் மாத்திரமே வீதியில் ஓடித்திரிந்தன. அதுவும் மண்ணெண்ணெயில் ஓடிய காலங்களும் உண்டு. மண்ணெண்ணெயில் ஓடுகின்ற வாகனங்கள் வரும் சத்தமே பெரிதாக கேட்கும். வீதியில் வாகனங்கள் இல்லாமல் ஓடிப் பழகிவிட்டார்கள். திடீரென்று ஆயிரக்கணக்கான, அல்ல... இலட்சக்கணக்கில் வாகனங்கள் வந்த பின்னரும் அவர்களால் பழைய நினைவிலிருந்து மீள முடியவில்லை." என்று அவருக்கு விளக்கமளித்த பின்னர் அவர் சமாதானமானார்.

பிரதான வீதியில் வாகனங்கள் ஏறி, திரும்புவதானால் நின்று நிதானமாக திரும்பவேண்டும் என்ற சமாச்சாரம் தெரியாதவர்கள் நம்மவர்கள் என்று சொல்ல முடியுமா என்ன?

அல்லது மாட்டு வண்டில்கள் பழகிவிட்டபின்னர் தானாக தோட்டங்களுக்குப் போவதுபோல இவர்கள் பழைய பழக்கதோசத்தில் அவ்வாறு ஓடுகிறார்கள் என்றுதான் சொல்லமுடியுமா?

- ஊர்க்குருவி

# தலைமன்னாரில் உருக்குலைந்த சடலம் கரையொதுங்கியது!

மன்னார், ஜூலை 17

தலைமன்னார் கடற்பரப்பில் நேற்று வெள்ளிக்கிழமை காலை கடல் கண்காணிப்பு பணியில் ஈடுபட்ட கடற்படையினர் தலைமன்னார் கடற்பரப்பின் 5 ஆவது தீடைப் பகுதியில் மிகவும் சிதைவடைந்த நிலையில் சடலம் கண்டுபிடித்தனர்.

இந்த சடலம் தொடர்பாக கடற்படையினர் தலைமன்னார் பொலிஸாரின் கவனத்திற்கு கொண்டு வந்தனர்.

தலைமன்னார் பொலிஸார் தீடைப்பகுதிக்குச் சென்று சடலத்தை பார்வையிட்டதோடு, மன்னார் நீதிமன்றத்தின் அனுமதியைப் பெற்று குறித்த சடலத்தை மீட்டுள்ளனர்.

சடலத்தை தலைமன்னார் பொலிஸார் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் ஒப்படைத்துள்ளனர். சடலம் பிரேத பரிசோதனைகளுக்காகப் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளை தலைமன்னார் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# இணையவழியில் ஆடிப்பிறப்பு விழா

யாழ்ப்பாணம், ஜூலை 17

யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கம் இணையவழியில் நடத்தும் ஆடிப்பிறப்பு விழா இன்று சனிக்கிழமை இரவு 8 மணிக்கு சூம் செயலி வழியாக நடைபெறவுள்ளது.

தமிழ்ச் சங்கத்தின் தலைவர் "செந்தமிழ்ச் சொல்லருவி" ச.லலீசன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் சியன தேசிய கல்வியியல் கல்லூரி விரிவுரையாளர் துணவியூர் சி. கேசவன், ஆடிப்பிறப்பின் மகத்துவம் என்ற பொருளில் சிறப்புரை ஆற்றுவார்.

தமிழ்ச் சங்கத்தின் ஆட்சிக் குழு உறுப்பினர் கு. பாலசண்முகன் வரவேற்புரையையும் செயலாளர் இ.சர்வேஸ்வரா நிறைவுரையையும் வழங்கவுள்ளனர்.

நிகழ்வில் இணைந்து கொள்வதற்கான அடையாள எண்- 673 6217 6791 கடவுச்சொல் - Tamil@123 (ஐ)

# ஹெரோயினுடன் இருவர் கைது!



கொழும்பு, ஜூலை 17

இரு வேறு போதைப் பொருள் சுற்றிவளைப்புகளில் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

இதற்கமைவாக பொரளை, சீவிலிப்புர பிரதேசத்தில் பொரளைப் பொலிஸார் மேற்கொண்ட விசேட சுற்றிவளைப்பில் 3 கிராம் 970 மில்லிகிராம் ஹெரோயினுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பொரளைப் பிரதேசத்தைச் சேர்ந்த 68 வயதுடைய நபரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை, பியகம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சியம்பலாப்பே பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் 4 கிராம் 300 மில்லிகிராம் ஹெரோயினுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மேற்படி இருவரையும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்குப் பொலிஸார் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.(இ)

**10.07.2021**
**சனிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | கணிதம் |
| 06.45 | தரம்-08 | விஞ்ஞானம் |
| 07.30 | தரம்-09 | கணிதம் |
| 08.15 | தரம்-10 | தமிழ் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | ஊடகம் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | மனைப்பொருளியல் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | சித்திரம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | தமிழ் இலக்கியம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | கத்தோலிக்கம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast வணிகப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் சிங்களம் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறு ஒளிபரப்பு |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் மறு ஒளிபரப்பு அனைத்துப் பாடங்களும் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | ஊடகம் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | மனைப்பொருளியல் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | சித்திரம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | கத்தோலிக்கம் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | தமிழ் |

**10.07.2021**
**சனிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | பாட்டு |
| 07.30 | முன்பள்ளி | அழகியல் |
| 08.15 | தரம்-01 | அழகியல் |
| 09.00 | தரம்-02 | கதை |
| 09.45 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 10.30 | தரம்-03 | சைவசமயம் |
| 11.15 | தரம்-04 | Computer |
| 12.30 | தரம்-04 | கிறிஸ்தவம் |
| 01.15 | தரம்-05 | Computer |
| 02.00 | தரம்-05 | கிறிஸ்தவம் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | பாட்டு |
| 04.15 | முன்பள்ளி | அழகியல் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | கதை |
| 06.00 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 06.45 | தரம்-03 | சைவசமயம் |
| 07.30 | தரம்-04 | Computer |
| 08.15 | தரம்-04 | கிறிஸ்தவம் |
| 09.00 | தரம்-05 | Computer |
| 09.45 | தரம்-05 | கிறிஸ்தவம் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 12.30 | தரம்-03 | சைவசமயம் |
| 01.15 | தரம்-04 | Computer |
| 02.00 | தரம்-04 | கிறிஸ்தவம் |
| 02.45 | தரம்-05 | Computer |
| 03.30 | தரம்-05 | கிறிஸ்தவம் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

Eelanadu ஈழநாடு
17.07.2021 சனிக்கிழமை
பிலவ வருடம், ஆடி 01
"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: editor@eelanadu.lk,
news@eelanadu.lk
தொலைபேசி : 021 730 1370

# அரசியல் பாவிகளை வரலாறு மன்னிக்காது!

பொதுவாக ஒரு கூற்றுண்டு. ஏமாறுவதற்கு ஒரு கூட்டம் இருந்தால் ஏமாற்றுபவர்களும் இருந்துகொண்டுதான் இருப்பார்கள். உண்மையில் பிரச்னை ஏமாற்றிக் கொண்டிருப்பவர்கள் அல்லர். மாறாக, ஏமாறிக் கொண்டிருப்பவர்களின் பக்கத்தில்தான் பிரச்னை உண்டு. தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு தொடர்பில் ஏராளம் பேசியாகிவிட்டது. 1949இல் இலங்கை தமிழ் அரசு கட்சி உருவாக்கப்பட்ட காலத்திலிருந்து நாம் அரசியல் தீர்வு தொடர்பில் பேசிவருகின்றோம். கண்ட முன்னேற்றம் என்ன?

மிதவாதிகளால் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு ஒன்றை பெற முடியாது - அப்படியோர் எண்ணம் தமிழ் இளைஞர்கள் மத்தியில் தோன்றியதால்தான், தமிழர் அரசியல் ஆயுதப் போராட்டமாகப் பரிணமித்தது. ஆங்கில எழுத்துக்களை முன்னுக்கு பின் போட்டு, கிட்டத்தட்ட 30இற்கும் மேற்பட்ட ஆயுத இயக்கங்கள் தோற்றம் பெற்றன.

பேராசிரியர் றொகன் குணரத்தின என்பவர் எழுதிருக்கும் 'இந்திய தலையீடு - இரகசிய முகவர் அமைப்பின் பங்கு' - என்னும் நூலில் 37 இயங்கள் இருந்தனவென பதிவு செய்யப்பட்டிருக்கின்றது. அவற்றின் பெயர் விபரங்களும் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. இறுதியில் அனைத்தும் உதிர்ந்து போய், ஐந்து பிரதான இயக்கங்கள் எஞ்சின. அதுவும் உதிர்ந்து இறுதியில், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் மட்டும் ஒரேயொரு தமிழ்த் தேசிய இயக்கமாகப் பரிணமித்தது. 2009இல் அதுவும் உதிர்ந்து போனது.

2009இற்கு பின்னர் தமிழ் மக்களின் தலைமையை பொறுப்பேற்றுக் கொண்ட, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, பிளவுபடாத இலங்கைக்குள் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு என்பதை, ஒரு கோஷமாக முன்வைத்து வருகின்றது. ஆனால், அரசியல் யதார்த்தமோ, இருக்கின்ற 13ஆவது திருத்தச் சட்டத்தின் கீழ் உள்ள, மாகாண சபையை கூட காப்பாற்றிக் கொள்ள முடியுமா என்னும் கேள்வியை முன்வைக்கின்றது.

இந்தியா தொடர்ந்தும் 13ஆவது திருத்தச்சட்டத்தின் அடிப்படையிலான அரசியல் தீர்வு தொடர்பிலேயே வலியுறுத்தி வருகின்றது. தமிழர் விவகாரம் சர்வதேச மயப்படுத்தப்பட்டுவிட்டதாகப் பலரும் கூறி வருகின்ற நிலையில், ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் இலங்கை மீதான பிரேரணையிலும் அரசியல் தீர்வை வலியுறுத்தும் இடத்தில் 13ஆவது திருத்தச் சட்டத்தின் கீழுள்ள மாகாண சபைகளை வினைத்திறனுடன் இயக்குவது தொடர்பிலேயே குறிப்பிடப்பட்டிருக்கின்றது. இந்த நிலையில் இனியும் வெறுமனே அரசியல் தீர்வு தொடர்பாக வலியுறுத்தியிருக்கின்றோம் என்று கூறிக் கொண்டிருப்பதில் என்ன அர்த்தம் உண்டு?

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அமெரிக்க தூதுவரை சந்தித்து அரசியல் தீர்வை வலியுறுத்தியிருக்கின்றது. அமெரிக்க தூதுவரும் தாம் இந்த விடயத்தை கவனிப்பாரென உறுதியளித்திருக்கிறாரென்ற செய்திகள் வெளியாகியிருக்கின்றன. முதலில் மற்றவர்களிடம் சென்று அரசியல் தீர்வு தொடர்பில் வலியுறுத்துகின்றபோது, கூட்டமைப்பிடம் அரசியல் தீர்வு தொடர்பில் தெளிவான நிலைப்பாடு இருக்க வேண்டும். இந்தியா 13ஆவது திருத்தத்தை, மாகாண சபையை வலியுறுத்துகின்றபோது, அமெரிக்கா எவ்வாறு அதனை மீறிச் செயல்பட முடியும்?

எனவே, தொடர்ந்தும் தமிழ் மக்களை ஏமாற்றும் நாடகத்தில் நடிகர்களாக இருப்பதைவிடுத்து, 13ஆவது திருத்தச் சட்டம், மாகாண சபை தொடர்பில் ஒரு தீர்க்கமான முடிவை தமிழ்த் தலைவர்கள் எடுக்க வேண்டும். அரசியல் தீர்வு என்று கூறி, மக்களை ஏமாற்றுவதை இனியும் தொடர்ந்தால் அது ஒரு பாவ காரியமாகும் என்பதை தலைவர்கள் என்போர் உணர வேண்டும். இருப்பதையும் பறிகொடுப்போமானால், இந்த அரசியல் பாவிகளை நிச்சயம் வரலாறு மன்னிக்காது.

# வெளிநாட்டு இராஜதந்திரிகள் உதவுவதைவிட தகவல்கள் அறிவதிலேயே நாட்டம் !

- அலசுவது இராஜதந்திரி -

அமெரிக்க தூதுவர் அலெய்னா பி டெப்லிட்ஸ் தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் உட்பட கூட்டமைப்பின் வேறு முக்கியஸ்தர்களையும் நேற்று முன்தினம் சந்தித்திருந்தார். அச்சந்திப்பின்போது இரா.சம்பந்தன் வடக்கு - கிழக்கு அரசியல் தீர்வு தொடர்பில் இலங்கை அரசுக்கு அமெரிக்கா அழுத்தம் கொடுக்க வேண்டு மெனக் கேட்டிருந்தார்.

இலங்கையில் யுத்தத்துக்குப் பின்னரான காலப்பகுதியில் வடக்கு - கிழக்கு மக்களின் அரசியல் அபிலாஷைகளை தீர்த்து வைப்பதோடு யுத்தக் குற்றங்கள் என்று கண்டறியப்பட்டவை தொடர்பாகவும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கிடைக்க வேண்டுமென்பதிலும் 2012ஆம் ஆண்டு ஜெனிவா மனித உரிமைகள் பேரவையில் அமெரிக்கா தனது கருத்துகளை முன்வத்திருந்தது.

**ஜெனிவா நிராகரிப்பு**

ஆனால், மனித உரிமைகள் பேரவையின் பிரேரணைகள் உரிய முக்கியத்துவத்தை பெறாத நிலையில், இன்றைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இலங்கை தொடர்பான ஜெனிவா மனித உரிமைகள் பேரவை நடவடிக்கைகளையும் நிராகரித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தலைவர் இரா. சம்பந்தன் இலங்கை பாராளுமன்றத்தில் எதிரக்கட்சி தலைவராக இருந்தபோதுகூட வடக்கு - கிழக்கின் அரசியல் பிரச்னை மற்றும் மனிதாபிமான பிரச்னைகள் சம்பந்தமாக நிறையவே எதிர்பார்க்கப்பட்டிருந்தது. ஆனால், எவ்வகையிலும் எந்தவொரு தீர்வும் வடக்கு-கிழக்கு பிரச்னைகள் தொடர்பாக கிடைத்திருக்கவில்லை.

வடக்கு - கிழக்கு மக்களின் பேராதரவோடும் எதிர்பார்ப்புகளோடும் பதவிக்கு வந்திருந்த முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் முன்னாள் பிரதம மந்திரி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான "நல்லாட்சி" என்றழைக்கப்பட்ட அரசாங்கம் கூட வடக்கு - கிழக்கு மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றத் தவறியிருந்தது.

இந்நிலையில் தற்போதைய அரசாங்கம் கூட வடக்கு - கிழக்கின் அரசியல் மற்றும் மனிதாபிமான பிரச்னைகளை தீர்ப்பதில் தொடர்ந்து அலட்சியப் போக்கை கொண்டிருப்பதையடுத்தே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், அமெரிக்கா தனது இராஜதந்திர நகர்வுகள் மூலமாக இலங்கை அரசுக்கு வடக்கு - கிழக்கு தமிழர் பிரச்னை தீர்வுக்கு அழுத்தங்களை பிரயோகிக்க வேண்டுமென கேட்டிருந்தார்.

அமெரிக்க தூதுவருடனான சந்திப்புக்கு முன்னர் இந்திய தூதுவரையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் சந்தித்திருந்தனர். இந்த சந்திப்புகளின்போதெல்லாம் அரசியல் தீர்வு வேண்டும். மனிதாபிமான பிரச்னைகளுக்கு தீர்வு வேண்டுமென்றெல்லாம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கோரிக்கை விடுப்பதையும், சந்திப்புகள் முடிவடைந்ததும் அரசுக்கு தாம் சார்ந்த நாடுகள் மூலமாக அழுத்தங்களை கொடுப்போம் என்று தெரிவித்து சந்திக்க வந்தவர்களை ஆசுவாசப்படுத்தி அனுப்பி வைப்பதையும் வெளி நாட்டு இராஜதந்திரிகள் வழக்கமாக கொண் டுள்ளனர்.

**இரு வெளிநாட்டு தூதுவர்கள்**

இலங்கையின் வடக்கு - கிழக்கு பிரச்னையைப் பொறுத்தவரை தீர்வுகளை எட்டும் விதத்தில் இராஜதந்திர ரீதியாக களத்திலிறங்கி செயல்பட்டவர்களில் இரு வெளிநாட்டு தூதுவர்களையே குறிப்பிட்டு சொல்ல முடியும்.

அவர்களில் ஒருவர் எண்பதுகளில் இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகராக இருந்த ஜே.என். டிக்ஸிட், மற்றயவர் இலங்கைக்கான நோர்வே தூதுவராக இருந்த ஜோன் வெஸ்ட்போர்க்.

இந்திய உயர் ஸ்தானிகராக இருந்த ஜே. என். டிக்ஸிட் இலங்கையில் பணியாற்றிய காலங்களிலேயே வடக்கு - கிழக்கு யுத்தம் முனைப்படைந்திருந்ததோடு, இந்தியா ஒரு முக்கிய சக்தியாக அன்றைய இலங்கை ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன மற்றும் வடக்கு - கிழக்கின் தமிழ் அரசியலாளர்களின் பங்களிப்போடு இலங்கை - இந்திய அமைதி ஒப்பந்தமும் கொண்டுவரப்பட்டிருந்தது.

இதுவிடயத்தில், அன்று இலங்கையிலிருந்த இந்திய உயர் ஸ்தானிகர் ஜே. என். டிக்ஸிட் நிறையவே பங்களிப்புச் செய்திருந்தார். இருந்தபோதிலும் இந்திய - இலங்கை ஒப்பந்தம் தோல்வியைத் தழுவியிருந்தது.

இதனையடுத்து 2002ஆம் ஆண்டில் நோர்வே இலங்கையில் சமாதான முயற்சிகளில் களமிறங்கிய நிலையில் நோர்வே தூதுவர் ஜோன் வெஸ்ட் போர்க் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசுக்குமிடையே சமாதான நடவடிக்கைகளை முன்னெடுப்பதில் அயராது பாடுபட்டிருந்தார்.

**நோர்வே அனுசரணை**

நோர்வேயின் அனுசரணையோடுகூடிய சமாதான முயற்சிகளில் அமெரிக்கா, இந்தியா, ஜப்பான், பிரிட்டன், சுவீடன் போன்ற நாடுகளும் இணைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இருந்தபோதிலும் மீளவும் ஏராளமான குறிப்பிடத்தக்களவு வெளிநாட்டுப் பயணங்களுடன் இடம்பெற்றிருந்த நோர்வேயின் சமாதான முயற்சியும் தோல்வியையே தழுவியிருந்தது.

இத்தகைய பின்னணியில் அமெரிக்காவோ அல்லது இந்தியாவோ தமது இலங்கையுடனான பிராந்திய நலன்களை முன்னிறுத்தியே வடக்கு - கிழக்கு பிரச்னையை அணுகுபவையாக இருக்கும் எனக் கருதலாம். அத்துடன், தமது நலன்களைப் பாதுகாக்கும் விதத்தில் தம்மை சந்திக்க வரும் அரசியல் அமைப்புகளிடமிருந்து தமக்கு வேண்டிய தகவல்களை அறிவதிலேயே இந்தியாவோ அல்லது அமெரிக்காவோ முனைப்பாக இருக்குமெனக்கருதலாம்.

இந்நிலையில் இலங்கையின் வடக்கு - கிழக்கு விவகாரத்தில்கூட அமெரிக்காவால் மட்டுமல்ல. இந்தியாவால்கூட ஓர் எல்லைக்கப்பால் இராஜதந்திர ரீதியாக எதனையும் மேற்கொள்ள முடியாதென்பதையே அறிய முடியும்.

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



ஈழநாடு



ஜுலை - 17 சனிக்கிழமை
பிலவ வருடம் - ஆடி 01
நல்ல நேரம் : 3.00 - 04.30
ராகு காலம் : 09.00 - 10.30
திதி : அட்டமி




**மேடம்**
கடந்த கால உழைப்புக்கான நன்மை கிடைக்கும். மற்றவர்களின் தேவையறிந்து உதவுவீர்கள். சேமிக்க வாய்ப்புண்டு. திடீர் வருமானம் கிடைக்கும். உடல்நலனில் அக்கறை ஏற்படும்.

**இடபம்**
பேச்சில் கவர்ச்சி கூடும். சமூகத்தில் அந்தஸ்து உயரும். செலவுகளைக் குறைக்கும் முயற்சியில் ஈடுபடுவீர்கள். நட்பு விஷயத்தில் விழிப்புடன் செயல்படுவது நல்லது.

**மிதுனம்**
வருமானம் உயரும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலைக்கும் கணவன், மனைவிக்கு புதிய பணி வாய்ப்பு கிடைக்கும். சுபநிகழ்ச்சிகளில் பங்கேற்று மகிழ்வீர்கள்.

**கடகம்**
வீண்பழிகளைக் கண்டு பயப்படவேண்டாம். காலம் பதில் சொல்லும். கடன் கொடுக்கவோ பிணைகையெழுத்து போடவேண்டாம். பணியிடத்தில் செல்வாக்கு உயரும்.

**சிம்மம்**
பதவியின் பொறுப்பு காரணமாக பதில் சொல்ல வேண்டி வரும். தொழில் சூடுபிடிக்கும். புகழ்ச்சிக்காக பணத்தை இழக்க வேண்டாம். பிள்ளைகளுக்கு வேலைவாய்ப்பு கிடைக்க யோகமுண்டாகும்.

**கன்னி**
அதிக உழைப்பால் நன்மை வரும். பல வகை லாபம் வரும். மற்றவர் பாராட்டில் மதிமயங்க வேண்டாம். கவலை நீங்கும். அதிர்ஷ்டம் பலவகைகளில் அதிகரித்து லாபம் தரும்.

**துலாம்**
திருமணம், குழந்தைப்பேறு பற்றிய நல்ல செய்தி உண்டு. வேலை வாய்ப்புகள் அதிகரிக்கும். வார்த்தைகளில் கவனம் தேவை. நிறையப் புண்ணியச் செயல்கள் செய்து மனநிறைவடைவீர்கள்.

**விருட்சிகம்**
உடல் நலம் பற்றிய அநாவசிய பயம் ஏற்பட்டு நீங்கும். அதிர்ஷ்டத்தை நம்பாமல் உழைப்பை நம்புவது நல்லது. எப்போதோ செய்த முயற்சி இன்று கைகொடுத்து மகிழ்விக்கும்.

**தனுசு**
குடும்பத்தில் சுபநிகழ்ச்சி நடத்தும் சூழ்நிலை உருவாகும். தன்னம்பிக்கையும் உழைப்பும் வெற்றிக்கு வழிவகுக்கும். தன்னம்பிக்கை குறையாமல் உங்களைக் காத்துக் கொள்ளுங்கள்.

**மகரம்**
நம்பிக்கை துளிர் விடும். சகோதரரால் நன்மை உண்டு. உடல்நிலை சீராகும். முக்கிய புள்ளிகளைச் சந்திப்பீர்கள். பணியில் வெற்றி உண்டு. விலகிச் சென்ற வரன்கள் மீளும்.

**கும்பம்**
பிள்ளைகள் உயர்கல்வியில் சேர ஆயத்தமாவார்கள். பேச்சு, செயலால் பிரச்னை வராதபடி கவனமாக இருங்கள். நண்பர்கள் என்று நம்பி புதியவர்களிடம் பழக வேண்டாம்.

**மீனம்**
குடும்பத்தில் சுபநிகழ்ச்சி நடத்தும் சூழ்நிலை உருவாகும். தன்னம்பிக்கையும் உழைப்பும் வெற்றிக்கு வழிவகுக்கும். தன்னம்பிக்கை குறையாமல் உங்களைக் காத்துக் கொள்ளுங்கள்.

# சசிகலாவின் மூன்று மணி நேர பேட்டியில் வெளிவருமா அ.தி.மு.கவின் இரகசியங்கள்?



சென்னை, ஜுலை 17,

தமிழக அரசியலைக் குழப்பிக்கொண்டிருக்கும் சசிகலாவின் மிக நீண்ட பேட்டி ஒன்று ஒளிபரப்பாக இருக்கிறது. ஜெயா தொலைக்காட்சியில் இது ஒளிபரப்பாகவுள்ளது. பத்திரிகையாளரும், அரசியல் ஆய்வாளருமான ஒருவர் சசிகலாவை ஜெயா தொலைக்காட்சிக்காக சந்தித்து அந்த பேட்டியை எடுத்திருக்கிறார்.

50 நிமிடங்கள் என்று இரண்டு, மூன்று நாட்கள் தொடர்ந்து ஒளிபரப்பப்படும் வகையில் அது செம்மைப் படுத்தப்பட்டு வருகிறது. அந்த பேட்டியில் அ.தி.மு.கவில் தனக்குள்ள உரிமை, எடப்பாடி பழனிசாமியை முதல்வராக்கிய தருணம், ஓ.பிஎஸ். தர்மயுத்தம் நடத்தியது எதற்காக என ஜெ.வின் மரணத்துக்குப் பின்னான பல விஷயங்களைப் போட்டு உடைக்கப் போகிறார் சசிகலா என்கிறார்கள் அவரின் வட்டாரத்தில்.

ஜெயலலிதாவின் மரணத்தில் உள்ள மர்மத்தை வெளிப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையோடுதான் ஓ.பன்னீர் தர்மயுத்தம் நடத்தினார். இதற்காகவே நீதிபதி ஆறுமுகசாமி விசாரணை ஆணையம் அமைக்கப்பட்டதை ஒட்டியே எடப்பாடி அணியும், ஓ.பன்னீர் அணியும் இணைந்தன. ஆனால், அந்த விசாரணை ஆணையம் அ.தி.மு.க. ஆட்சி முழுவதும் இருந்தும் விசாரணை முடியவில்லை.

ஜெயலலிதா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டதில் இருந்து அவர் மரணம் அடைந்தது வரை அவரது அருகே இருந்தவர் சசிகலா தான். இதன் அடிப்படையிலேயே அன்று சசிகலா மீதும் பல புகார்கள் சொல்லப்பட்டன. பொதுமக்களிடையேயும் இந்த விவகாரத்தில் சசிகலா மீது ஒரு சந்தேகமும் அதன் விளைவான கோபமும் அப்போது இருந் தது. அது தொடர்பான கருத்துகளும் சமூக தளங்களில் வெளிப்படையாக பேசப் பட்டன. இந்த நிலையில் தனது பேட்டியில் ஜெயலலிதா மரண மர்மம் தொடர்பாக சசிகலா உடைத்துப் பேசுவாரா என்ற எதிர்பார்ப்பு கட்சியினர் தாண்டி நிலவுகிறது.

# தீவிரமடையும் மேகதாது விவகாரம் ஸ்டாலின் நாளை டில்லி பயணம்



சென்னை, ஜுலை 17

சர்ச்சைக்குரிய மேகதாது அணை விவகாரம் தொடர்பாக பிரதமர் மோடியை தமிழக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் சந்திக்க நாளை புது டில்லி செல்ல உள்ளாரெ்ன தகவல் வெளியாகி உள்ளது.

கர்நாடக அரசு திட்டமிட்டுள்ள இந்த மேகதாது அணை திட்டத்திற்கு தமிழ்நாடு அரசு கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகிறது. எக்காரணம் கொண்டும் இந்த திட்டத்தை அனுமதிக்கமாட்டோம் என்று கூறி வருகிறது.

இந்த பிரச்னையில் இரு மாநிலங்களின் நலன்களுக்கும் காக்கும் வகையில் ஒரு நல்ல முடிவு எடுக்கப்படும் என்று மத்திய ஜல்சக்தித்துறை மந்திரி கஜேந்திரசிங் ஷெகாவத் சமீபத்தில் பெங்களூரு வந்திருந்தபோது கூறினார். அதே நேரத்தில் மேகதாது திட்ட விஷயத்தில் கர்நாடகத்திற்கு உதவிகள் செய்யப்படும் என்றும் அவர் எடியூரப்பாவிடம் உறுதியளித்தார்.

இந்த நிலையில் தமிழ்நாட்டின் அனைத்துக்கட்சி தலைவர்கள் அடங்கிய குழு நேற்று முன்தினம் புதுடில்லி சென்றது. அங்கு ஜல்சக்தித் துறை மத்திய மந்திரியை நேரில் சந்தித்து அந்த குழு முறையிட உள்ளது. மேகதாது விஷயத்தில் இரு மாநிலங்களும் தங்களின் முடிவில் பிடிவாதமாக உள்ளன. இந்த நிலையில் கர்நாடக முதலமைச்சர் எடியூரப்பா நேற்று திடீர் பயணமாக டில்லி சென்றுள்ளார். அங்கு பிரதமரை நேரில் சந்திக்கும்போது மேகதாது திட்டத்திற்கு விரைவாக அனுமதி வழங்குமாறு எடியூரப்பா கேட்க உள்ளாரெ்ன கூறப்படுகிறது.

இந்த நிலையில் மேகதாது அணை விவகாரம் தொடர்பாக பிரதமர் மோடியை சந் திக்க முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் சந்திக்க நாளை டில்லி செல்ல உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. மோடியை கர்நாடக முதல மைச்சர் சந்திக்க உள்ள நிலையில் தமிழக முதலமைச்சரும் பிரதமரை சந்திக்க அவசரமாக புறப்படவுள்ளார்.

# ஒரு கோடி தடுப்பூசி தமிழகத்துக்கு தேவை





சென்னை, ஜுலை 17,

தமிழகத்துக்கு ஒரு கோடி கொரோனா தடுப்பூசிகளை வழங்க வேண்டும் என, முதல்வர் மு.க.ஸ்டாலின் பிரதமர் மோடியிடம் நேற்று வலியுறுத்தியுள்ளார்.

பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் நேற்று காணொலிக் காட்சி மூலமாக தமிழகம், கேரளா, கர்நாடகா, ஒடிசா, மகாராஷ்டிரா, ஆந்திரா மாநில முதல்வர்களுடன் கொரோனா தடுப்பு நடவடிக்கைகள் தொடர்பாக காணொலி காட்சி வாயிலாக கலந்தாய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இதில், தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின், ”கொரோனா பெருந்தொற்றைச் சமாளிக்கும் கடினமான பணியை, புதிதாகப் பொறுப்பேற்ற ஓர் அரசு எதிர்கொள்ள வேண்டிய நிலை இருந்த ஒரே பெரிய மாநிலம் தமிழகம்தான். எனது அரசு இச்சவாலை எதிர்கொண்டு, உயிரிழப்புகளைக் குறைத்து, நோய்த்தொற்றைக் கட்டுக்குள் கொண்டுவந்துள்ளது.

எங்கள் மாநிலத்துக்கான தடுப்பூசி ஒதுக்கீடு மிகவும் குறைவாகவே உள்ளது. இந்த நெருக்கடியைச் சமாளிக்க, சிறப்பு ஒதுக்கீடாக ஒரு கோடி தடுப்பூசிகளை வழங்கக் கோரியிருக்கிறேன். இந்த முக்கியமான பிரச்னையில், நான் உங்கள் ஆதரவை எதிர்நோக்குகிறேன்” எனத் தெரிவித்தார்.




# “இலவச கல்வி உரிமையை பறிக்காதே”

## நுவரெலியாவில் நேற்று போராட்டம்

கொழும்பு, ஜூலை 17

நுவரெலியா நகரில் ஒன்றிணைந்த ஆசிரியர் சங்கங்கள் போராட்டம் ஒன்றை நேற்றுக் காலை முன்னெடுத்தன.

இலவச கல்வியை வியாபாரமாக்கும் கொத்தலாவலை சட்ட மூலத்தை சுருட்டிக்கொள், இலவச கல்வி உரிமையை பறிக்காதே, விவாசாயிக்கு உரத்தை வழங்கு, நீதிக்கான போராட்டத்திற்கு தடைவிதிக் காதே,கொத்தலாவலை பல்கலை கழகத்தை இராணுவமயப்படுத்தாதே ,

தேசிய ஆசிரியர்கள் பிரச்னைக்கு தீர்வை வழங்கு, ஆசிரியர்களை வஞ்சிப்பதை நிறுத்தி கொள், ஆசிரியர்களின் கடன் சுமைக்கு தீர்வை வழங்கு, ஆசிரியர்களை அவமானம்படுத்துவதை நிறுத்தி கொள், ஆசிரியர்களை தூற்றி பேச அமைச்சருக்கு தகுதியில்லை, ஆசிரியர்கள் மீதான அடக்குமுறையை தவிர், விடுதலை செய்யப்பட்டும் தனிமைப்படுத்தி வஞ்சிக்கும் ஆசியர் சங்கத்தினரை உடனே விடிவித்து விடு என பல கோரிக்கைகளையும் கோசங்களையும் எழுப்பி நுவரெலியா நகரில் இந்த போராட்டம் நடைபெற்றது.

நுவரெலியா மத்திய தபால் நிலையத்துக்கு முன் முற்பகல் 10.30 மணியளவில் இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதில் சமூக அமைப்புகள், ஆசிரியர் சங்கங்கங்கள், வர்த்தக சங்கத்தினர்,சமூக நீதிக்கான அமைப்பினர் என பலரும் போராட்டத்தில் பங்கேற்றனர்.

# கல்வியும் இராணுவ மயமா? அடியோடு மறுக்கிறது அரசு



**கொழும்பு, ஜூலை 17**

**இலவசக்கல்வியை தனியார் மற்றும் இராணுவ மயப்படுத்துவதற்கு அரசு முயற்சிப்பதாக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகளை ஆளுங் கூட்டணியின் தலைமைக் கட்சியான பொதுஜன பெரமுன முற்றாக நிராகரித்துள்ளது.**

அத்துடன், நாட்டிலுள்ள பல்கலைக்கழக கட்டமைப்பு விரிவுபடுத்தப்படும் எனவும் அந்தக் கட்சி சுட்டிக்காட்டியுள்ளது.

பொதுஜன பெரமுனவின் ஊடகவியலாளர் மாநாடு அந்தக் கட்சியின் தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே கட்சியின் உறுப்பினரான இராஜாங்க அமைச்சர் அருந்திக பெர்ணான்டோ இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு,

நாட்டில் 2 இலட்சத்துக்கு மேற்பட்டோர் உயர்தரப் பரீட்சைக்கு தோற்றுகின்றனர். அவர்களில் சுமார் 25 ஆயிரம் பேருக்கு மாத்திரமே பல்கலைக்கழகம் செல்வதற்கான வாய்ப்பு கிட்டும். வசதி படைத்தவர்கள் தமது பிள்ளைகளை வெளிநாடுகளுக்கு அனுப்பி பட்டம்பெற வைப்பார்கள்.

ஆனால், நடுத்தர வகுப்பில் உள்ளவர்களுக்குதான் நெருக்கடி. 3 பாடங்களில ஏ சித்திகளை பெற்றவர்கள்கூட பல்கலைக்கழகம் செல்லமுடியாத நிலை காணப்படுகின்றது. அவர்களுக்கு வெளிநாடு செல்லவும் நிதிவசதி இல்லை.

எனவே, உள்நாட்டிலுள்ள பல்கலைக்கழகங்கள் விரிவுபடுத்தப்படவேண்டும். இதன் அர்த்தம் தனியார் பல்கலைக் கழகங்களை உருவாக்குவது அல்ல. அரச பல்கலைக்கழகங்களை விருத்தி செய்யவேண்டும் என்பதாகும். சேர். ஜோன் கொத்தலாவலை பல்கலைக்கழகம், இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கீழ்தான் செயல்படுகின்றது.

பாடத்திட்டங்களை இராணுவம் உருவாக்குவதில்லை. முறையாகவே நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன. நிர்வாகத்தில் ஒரு சிலர் மட்டுமே இராணுவத்தினர் உள்ளனர். ஏனையோர் பல்கலைக்கழகங்களுடன் தொடர்புபட்டவர்கள். எனவே, கல்வி இராணுவ மயப்படுத்தப்படுகின்றது என்ற குற்றச்சாட்டு ஏற்புடையது அல்ல.

ஜே.வி.பி. தலைவர்களின் பிள்ளைகள் வெளிநாடுகளில் படித்துப் பட்டம் பெறுகின்றனர். அவர்கள் இங்கு போராடுகின்றனர்-என்றார்.



# தியத்தலாவையில் கொரோனா சிகிச்சை மையம் திறந்துவைப்பு

கொழும்பு, ஜூலை 17

தியத்தலாவை ஆயுர்வேத வைத்தியசாலை வளவில் நிர்மாணிக்கப்பட்ட கோவிட்-19 இடைநிலை ஆயுர்வேத சிகிச்சை நிலையத்தை, மாகாண ஆளுநர் ஏ.ஜே.எம்,முஸம்மில் நேற்று வைபவரீதியாக திறந்து வைத்தார்.

அரசின் 15.5 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் , இலங்கை இராணுவத்தின் 17 ஆவது பொறியியல் படையணியினரின் பூரண பங்களிப்புடன் மேற்படி சிகிச்சை நிலையம் நிர்மாணிக்கப்பட்டது.

# சுகாதார கட்டுப்பாட்டில் மேலும் சில தளர்வுகள்

கொழும்பு, ஜூலை 17

கோவிட்-19 நோய்த்தொற்று பரவல் காரணமாக விதிக்கப்பட்டுள்ள சில கட்டுப்பாடுகளை தளர்த்த சுகாதார சேவைகளின் பணிப்பாளர் நாயகம் புதிய சுகாதார வழிகாட்டுதல்களை வெளியிட்டுள்ளார்.

அதன்படி, நேற்று முதல், உயிரியல் பூங்காக்கள், வனவிலங்கு பூங்காக்கள், சிறுவர் பூங்காக்கள், விடுதிகள், பந்தயமையங்கள் மற்றும் அரங்குகளில் இசை நிகழ்ச்சிகள் அனுமதிக்கப்படும்.

இருப்பினும், சுகாதார சேவைகளின் பணிப்பாளர் நாயகம் வெளியிட்டுள்ள புதிய சுகாதார வழிகாட்டுதல்கள் வெளிப்புற திருவிழாக்கள் மற்றும் இசை நிகழ்ச்சிகள் அனுமதிக்கப்படாது என்று கூறுகின்றன.

# மட்டக்களப்பு மாவட்டத்திலும் டெல்டா வைரஸ் பரவும் அபாயம்

## பிராந்திய சுகாதார பணிப்பாளர் எச்சரிக்கை

மட்டக்களப்பு, ஜூலை 17

மட்டக்களப்பு மாவட்டத்திலும் டெல்டா திரிபு வைரஸ் பரவும் சாத்தியம் இருப்பதாக மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார பணிப்பாளர் மருத்துவர் நாகலிங்கம் மயூரன் தெரிவித்துள்ளார்.

நேற்று மட்டக்களப்பு பிராந்திய சுகாதார பணிமனையில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.அவர் மேலும் தெரிவிக்கையில்-

மட்டக்களப்பு மக்கள் மிகவும் அவதானத்துடன் சுகாதார நடைமுறைகளை பேணி இந்தத் கொரோனா தொற்றில் இருந்து மட்டக்களப்பு மாவட்டத்தை பாதுகாக்க உதவவேண்டும்.

மட்டக்களப்பு மாமாங்கம் பகுதி 21 நாட்களுக்குப் பின்னதாக விடுவிக்கப்பட்டுள்ளது. அதேவேளை கடந்த 24 மணித்தியாலத்தில் 44 தொற்றாளர்கள் மட்டக்களப்பு மாவட்டத்தில் அடையாளங் காணப்பட்டுள்ளனர்.

களுதாவளையில் உள்ள சிறுவர் இல்லம் ஒன்றில் 34 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட அன்ரிஜென் பரிசோதனையில் 22 பேருக்கு கொரோனா தொற்று உறுதியானது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக குறித்த இல்லம் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது-என்றார்.

# 50 இலட்சம் பேருக்கு தடுப்பூசி என்ற சாதனை இலக்கை எட்டியது இலங்கை

கொழும்பு, ஜூலை 17

இலங்கையில் நேற்று முன் தினம் வியாழக்கிழமை வரையான தரவுகளின் பிரகாரம் 50 இலட்சத்துக்கும் மேற்பட்டவர்கள் குறைந்தது ஒரு கொரோனா வைரஸ் தடுப்பூசியைப் பெற்றுள்ளனர்.

நேற்று முன் தினம் வரை மொத்தம் 51 இலட்சத்து 75 ஆயிரத்து 605 பேருக்கு குறைந்தது ஒரு தடுப்பூசி போடப்பட்டுள்ளது.

அதிகளவாக 40 இலட்சத்து 53 ஆயிரத்து 819 பேர் சீனாவின் சினோபார்ம் முதல் தடுப்பூசியையும் 12 இலட்சத்து 28 ஆயிரத்து 527 பேர் இரண்டாவது தடுப்பூசியையும் பெற்றுள்ளனர்.

9 இலட்சத்து 25 ஆயிரத்து 242 பேருக்கு இந்தியாவின் அஸ்ட்ராசெனகா முதல் தடுப்பூசியும் 3 இலட்சத்து 85 ஆயிரத்து 885 பேருக்கு இரண்டாவது தடுப்பூசியும் போடப்பட்டுள்ளது.

157,368 பேருக்கு ரஷ்யாவின் ஸ்புட்னிக் 5 முதல் தடுப்பூசி போடப்பட்டுள்ளது. 14,464 இரண்டாவது தடுப்பூசியைப் பெற்றுள்ளனர். 39,176 பேர் பைசர் தடுப்பூசியின் முதல் அளவைப் பெற்றுள்ளனர்.

அரசாங்க தகவல் திரணக்களத்தின் தரவுகளின் பிரகாரம் மே 12 அன்று இலங்கையில் 10 இலட்சம் பேருக்கு தடுப்பூசி போடப்பட்டது. ஜூன் 8 அன்று இந்த தொகை 20 இலட்சமாக அதிகரித்தது. ஜூலை 5 ஆம் திகதி 30 இலட்சம் தடுப்பூசிகளை நிர்வகித்த மைல்கல் அடையப்பட்டது. ஜூலை 12 ஆம் திகதி இந்த எண்ணிக்கை 40 இலட்சமாக உயர்ந்தது.

இந்நிலையில் நேற்று 50 இலட்சத்துக்கு மேல் தடுப்பூசிகளைக் போட்ட மைல்கல்லை இலங்கை எட்டியது.

ஜூலை 14 ஆம் திகதி ஒரு நாளில் அதிகளவாக 384,763 பேருக்கு தடுப்பூசி போடப்பட்டது.

இந்த ஆண்டு செப்ரெம்பர் மாதத்துக்கு முன்னர் தடுப்பூசி பெறத் தகுதி பெற்ற அனைவருக்கும் குறைந்தது ஒரு தடுப்பூசியைப் போட இலங்கை அரசாங்கம் இலக்கு நிர்ணயித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நவீன மயப்படுத்தப்படுகின்றது கட்டுநாயக்க விமான நிலையம்



கொழும்பு, ஜூலை 17

நாட்டின் பிரதான சர்வதேச விமான நிலையமான கட்டுநாயக்க விமான நிலையத்தின் வசதிகளை மேம் படுத்தும் பணிகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

நிர்மாணிக்கப்பட்டு வரும் கட்டுநாயக்க விமான நிலையத்தின் இரண்டாவது தளத்தின் மாதிரிக் காணொலி தற்போது வெளியிடப்பட்டுள்ளது.

550 மில்லியன் அமெரிக்க டொலர் நிதி முதலீட்டில் இந்த விரிவுபடுத்தல் திட்டம் முன்னெடுக்கப்பட்டு வரு கின்றது.

இதன்மூலம் நாட்டுக்கு வருகை தரும் பயணிகள் மற்றும் நாட்டிலிருந்து வெளியேறும் பணிகள் ஒரு மேம்பட்ட அனுபவத்தைப் பெற்றுக்கொள்ள முடியும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த அபிவிருத்தித் திட்டமானது 2023ஆம் ஆண்டு நிறைவடையும் என எதிர்பார்க்கப்படும் நிலையில் குறித்த கட்டுமானப் பணிகள் தொடர்பான காணொலி தற்போது வெளியிடப்பட்டுள்ளது. (இ)

# வடக்கு-கிழக்கில் 30 வயதுக்கு மேற்பட்ட சகலருக்கும் 2 மாதங்களுக்குள் தடுப்பூசி

## அமைச்சர் நாமல் ராஜபக்ஷ நடவடிக்கை

கொழும்பு, ஜூலை 17

**வடக்கு - கிழக்கு மாகாணங்களை சேர்ந்த 30 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் எதிர்வரும் இரண்டு மாத காலப் பகுதிக்குள் கோவிட்-19 தடுப்பூசிகளை பெற்றுக் கொடுப்பதற்கு சிறப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக இளைஞர் விவகார மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.**



வடக்கு - கிழக்கு மாகாண மக்களுக்கான கோவிட்-19 தடுப்பூசி ஏற்றும் செயல்பாட்டை விரைவுபடுத்துவது தொடர்பில் அமைச்சர் நாமல் ராஜபக்ஷ, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுடன் கலந்துரையாடி இந்த சிறப்புத் திட்டத்தை ஏற்பாடு செய்துள்ளார்.

அதற்கமைய வடக்கு - கிழக்கு மாகாணங்களை சேர்ந்த 30 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் எதிர்வரும் இரண்டு மாதங்களுக்குள் கோவிட் -19 தடுப்பூசிகளை பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

# கிராம சேவையாளர் மீது வவுனியாவில் தாக்குதல்!

வவுனியா, ஜூலை 17

வவுனியா தாண்டிக்குளம் பிரிவு கிராமசேவகரை ஒருவர் தாக்கியுள்ளார்.

இந்த சம்பவம் நேற்று முன் தினம் மகாறம்பைக்குளம் பகுதியில் இடம்பெற்றது.

வவுனியா தாண்டிக்குளம் ஏ-9 வீதியில் அரசுக்கு சொந்தமான காணியில் சில நபர்கள் சுற்றுவேலி அமைத்து,வியாபார நிலையங்களையும் அமைத்திருந்தனர்.

இந்த விடயம் தொடர்பாக கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளுக்கமைய கடந்த 9 ஆம் திகதி அப்பகுதிக்குச் சென்ற வவுனியா பிரதேச செயலாளர் தலைமையிலான குழுவினர் அப்பகுதியில் அமைக்கப்பட்டிருந்த அனுமதியற்ற வியாபார நிலையங்களை அகற்றியிருந்தனர்.

குறித்த சம்பவத்தை சுட்டிக்காட்டி தாண்டிக்குளம் பிரிவு கிராம சேவகரை ஒருவர் நேற்று முன்தினம் தாக்கினார்.

இந்த சம்பவம் தொடர்பாக கிராமசேவகரால் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு வழங்கப்பட்டது. தாக்குதல் மேற்கொண்ட நபர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

# மினி சூறாவளியினால் முப்பது வீடுகள் சேதம்!

மட்டக்களப்பு, ஜூலை 17

மட்டக்களப்பு கோறளைப் பற்று தெற்கு கிரான் பிரதேச செயலாளர் பிரிவின் வாகனேரி குடாமுனைக்கல் கிராமத்தில் நேற்று முன் தினம் வியாழக் கிழமை மாலை வீசிய மினி சூறாவளியினால் முப்பது வீடுகள் சேதமடைந்துள்ளனவென கிரான் பிரதேச செயலாளர் எஸ்.ராஜ்பாபு தெரிவித்தார்.

நேற்று முன்தினம் வியாழக் கிழமை மாலை 5.30 மணி அளவில் வாகனேரி குடாமுனைக்கல் கிராமத்தில் ஏற்பட்ட திடீர் சூறாவளி மற்றும் மழை காரணமாக இவ் அனர்த்தம் ஏற்பட்டுள்ளது. இதில் இரண்டு வீடுகள் முழுமையாகவும் 28 வீடுகள் பகுதி அளவில் சேதமடைந்துள்ளன.

இதன்போது மக்கள் அச்சமடைந்த நிலையில் பாதுகாப்பான இடங்களில் தஞ்சமடைந்துள்ளனர். இந்த மினி சூறாவளியினால் வீட்டுக் கூரைகள் தூக்கி வீசப்பட்டதுடன், வீட்டில் உள்ள பொருள்களுக்கும் சேதம் ஏற்பட்டுள்ளன. மினி சூறாவளியினால் எவருக்கும் உயிர் இழப்புக்கள் ஏற்படவில்லை.

இந்நிலைமையை நேரில் கண்டறிவதற்காக நேற்று வெள்ளிக்கிழமை கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி பிரதேச சபையின் தவிசாளர் ஏ.எம். நௌபர், கிரான் பிரதேச செயலாளர் எஸ்.ராஜ்பாபு உள்ளிட்ட பிரதேச சபை உறுப்பினர்கள், அதிகாரிகள் பலரும் சம்பவ இடத்துக்கு விஜயம் செய்திருந்தனர்.

(அ)

# இலங்கைக்கு 15 இலட்சம் மொடர்னா நன்கொடையாக வழங்கியது அமெரிக்கா

கொழும்பு, ஜூலை 17

கோவாக்ஸ் உலக பொது தடுப்பூசித் திட்டத்தின் கீழ் இலங்கைக்கு 1.5 மில்லியனுக்கும் மேற்பட்ட மொடர்னா கோவிட்-19 தடுப்பூசிகளை அமெரிக்கா நேற்று நன்கொடையாக வழங்கியது.

கோவாக்ஸ் ஊடாக விநியோகிக்கப்படும் இத்தடுப்பூசிகள், உயிர்களைக் காப்பதுடன் பெருந்தொற்றினை முடிவுக்கு கொண்டுவருவதற்கு அவசியமான தடுப்பூசியேற்றல் பாதுகாப்பினையும் அதிகரிக்கும் என இலங்கைக்கான அமெரிக்க தூதரகம் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலகளாவிய பெருந்தொற்றினை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான அமெரிக்காவின் உறுதிப்பாடு மற்றும் இலங்கை மக்களுடனான எமது நீடித்த பங்காண்மையின் ஓரங்கமாக இத் தடுப்பூசிகள் இலங்கை அரசுக்கு இலவசமாக வழங்கப்படுகின்றன.




இலங்கையர்கள் மீண்டும் பணிக்குத் திரும்புவதற்கும் மற்றும் ஆரோக்கியமாக இருப்பதற்கும் அவை உதவும். இது ஐக்கிய அமெரிக்காவுக்கும் இலங்கைக்கும் இடையிலான நீண்டகால நட்புறவின் பிரதிபலிப்பாக நாம் வழங்கும் அன்பளிப்பாகும் என்று இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அலைனா பி. டெப்லிட்ஸ் கூறினார்.

இத்தடுப்பூசிகளை விநியோகிப்பதற்காக இலங்கை சுகாதார அமைச்சு, யுனிசெப் மற்றும் ஏனைய உலகளாவிய கோவாக்ஸ் பங்குதாரர்களுடனான எமது பங்காண்மையானது, இப்பெருந்தொற்றினைக் கட்டுப்படுத்துவதற்கும், புதிய திரிபுகள் உருவாகும் வேகத்தைக் குறைப்பதற்கும் மற்றும் உலக பொருளாதாரத்தை மீள ஆரம்பிக்க உதவுவதற்கும் மிகமுக்கியமானதாகும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

(அ)

# பருத்தித்துறை தனியார் வங்கி முகாமையாளருக்கும் தொற்று

யாழ்ப்பாணம், ஜூலை 17

கொடிகாமம் பகுதியில் நேற்று தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்ட வங்கி ஊழியர்கள் இருவர் பற்றிய விவரங்கள் வெளியாகியுள்ளன.

அவர்களில் ஒருவர் வங்கியின் முகாமையாளர் என்றும் மற்றையவர் வங்கி பராமரிப்பு ஊழியர் என்றும் சுகாதாரத் தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

நேற்று பருத்தித்துறையில் 66 பேருக்கு அன்ரிஜென் பரிசோதனைகள் இடம்பெற்றிருந்த நிலையில் 04 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டிருந்தது.

அவர்களில் இருவர் கொமர்ஷல் வங்கி ஊழியர்கள் என்றும் மற்றைய இருவரும் நகர சபை ஊழியர்கள் என்றும் சுகாதாரத் தரப்பினர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# சட்டவிரோதமாக கிரவல் அகழ்வு மேற்கொள்ளப்பட்ட பகுதி முற்றுகை

முல்லைத்தீவு, ஜூலை 17

கொக்காவில் பிரதேசத்தில் சட்டவிரோத கிரவல் அகழ்வு மேற்கொள்ளப்பட்ட பகுதி முற்றுகையிடப்பட்டு 4 கனரக வாகனங்களுடன் ஐவர் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்த நடவடிக்கை நேற்று இடம் பெற்றுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள வனப் பகுதியிலேயே இந்த முறையற்ற கிரவல் அகழ்வு முன்னெடுக்கப்பட்டு வந்துள்ளது.

இந்த விடயம் தொடர்பில் இராணுவப் புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த தகவலுக்கு அமைவாக புவிச்சரிதவியல் அளவை சுரங்கங்கள் பணியகத்தின் மண் அகழ்வாராய்ச்சி தள சட்டப் பிரிவு அதிகாரிகள் மற்றும் இராணுவப் புலனாய்வுப்பிரிவு அதிகாரிகளால் குறித்த பகுதி சுற்றிவளைக்கப்பட்டு சோதனையிடப்பட்டது.

இதன்போது கிரவல் அகழ்வுக்கு அனுமதிக்கப்பட்டமைக்கு மாறாக அகழ்வு மேற்கொள்ளப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டதை அடுத்து அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அனுமதிக்கப்பட்ட பகுதிக்கு மேலதிகமாக அகழ்வு மேற்கொள்ளப்பட்டமை மற்றும் அனுமதிக்கப்பட்ட அளவுக்கு மாறாக 20 அடிக்கு மேல் அகழ்வு மேற்கொண்டமை போன்ற குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக புவிச்சரிதவியல் அளவை சுரங்கங்கள் பணியக அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

குறித்த அகழ்வு பணிக்கு பயன்படுத்தப்பட்ட 4 கனரக வாகனங்கள் மற்றும் அதன் சாரதிகள் நால்வரும் கைது செய்யப்பட்டுள்ளதுடன், குறித்த கிரவல் அனுமதி பெற்றுள்ள நபரும் கைது செய்யப்பட்டார்.

# மன்னார் சொரூபங்கள் மீது தாக்குதல் கவிந்த எம்.பி நேரில் சென்று பார்வை

மன்னார், ஜூலை 17

மன்னார் பொலிஸ் பிரிவில் உள்ள 6 இடங்களில் அமைந்துள்ள கத்தோலிக்க ஆலயம் மற்றும் சிற்றாலயச் சொரூபங்கள் மீது கடந்த சில தினங்களாக தாக்குதல் சம்பவங்கள் இடம்பெற்று வந்த நிலையில் பாராளுமன்ற உறுப்பினர் கவிந்த ஜெயவர்த்தன நேற்று வெள்ளிக்கிழமை காலை மன்னாருக்கு விஜயம் செய்து சேதத்துக்கு உள்ளான கத்தோலிக்க ஆலயம் மற்றும் சிற்றாலய சொரூபங்களை பார்வையிட்டார்.

மன்னாருக்கு நேற்றுக் காலை விஜயத்தை மேற்கொண்ட கம்பஹா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கவிந்த ஜெயவர்த்தன மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்துக்கு சென்று ஆலய பங்குத்தந்தை அருட்தந்தை எஸ்.ஞானப்பிரகாசம் அடிகளாரை சந்தித்தார்.

அதனைத் தொடர்ந்து கடந்த திங்கள்,செவ்வாய்,புதன் ஆகிய மூன்று தினங்களிலும் அதிகாலை நேரம் மன்னார் பகுதியில் அமைந்துள்ள 6 கத்தோலிக்க ஆலயம் மற்றும் சிற்றாலயச் சொரூபங்கள் மீது இடம்பெற்ற தாக்குதல் சம்பவத்தையும், ஏற்பட்ட சேதத்தையும் பாராளுமன்ற உறுப்பினர் கவிந்த ஜெயவர்த்தன அருட்தந்தை எஸ்.ஞானப்பிரகாசம் அடிகளாருடன் நேரடியாக சென்று பார்வையிட்டார்.

சம்பவத்துடன் தொடர்புடையவர்களை அடையாளம் கண்டு அவர்கள் மீது சட்ட நடவடிக்கைளை மேற்கொள்ள உரிய பொலிஸ் அதிகாரிகளின் கவனத்துக்கு கொண்டு வர உள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் கவிந்த ஜெயவர்தன தெரிவித்தார்.



# அமைச்சர் தினேஷ் குணவர்த்தனவை சந்தித்து பேசினார் அமெ. தூதுவர்!

கொழும்பு, ஜுலை 17

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அலெய்னா ரெப்லிட்ஸ், வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தனவை நேற்று முன்தினம் சந்தித்து கலந்துரையாடினார்.

கொரோனாவை எதிர்த்துப் போராடுவதற்கும், எம்.வி. எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் அனர்த்தத்தினால் ஏற்பட்ட சுற்றுச்சூழல் மற்றும் சமூகப் பொருளாதாரத் தாக்கத்தைத் தணிப்பதற்கும் வழங்கப்பட்ட உதவிகளுக்கு வெளிவிவகார அமைச்சர், அமெரிக்க அரசாங்கத்துக்கும், மக்களுக்கும் இதன் போது நன்றி தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா ஊடாக தனிப்பட்ட பாதுகாப்பு உபகரணங்கள் மற்றும் ஒக்சிமீற்றர்கள் போன்ற அவசர மருத்துவப் பொருட்களையும், கோவெக்ஸ் திட்டத்தின் மூலம் தடுப்பூசிகளையும் அனுப்பியமைக்காக அவர் குறிப்பாக அமெரிக்க அசாங்கத்தைப் பாராட்டினார்.

# நாட்டின் வளங்களை தனிப்பட்ட சொத்து போன்று விற்கிறது அரசு

## சுனில் ஹந்துனெத்தி குற்றச்சாட்டு



**கொழும்பு, ஜுலை 17**

**தனிப்பட்ட சொத்தாக கருதி எமது நாட்டின் வளங்களை தற்போதைய அரசாங்கம் விற்பனை செய்கின்றது. இதுவா அரசாங்கத்தின் கொள்கை என மக்கள் விடுதலை முன்னணி கேள்வி எழுப்பியுள்ளது.**

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும்போதே அந்த கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துனெத்தி இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார்.

இதன்போது கருத்து வெளியிட்ட அவர்,

ஜனாதிபதி, பிரதமர் மற்றும் புதிய நிதியமைச்சர் ஆகியோர், தமக்கு பணத்தை தேடும் வழி தெரியும் என கூறினாலும் அவர்களுக்கு தனிப்பட்ட ரீதியில் பணத்தை தேடும் வழியே தெரியுமென்பதை நாங்கள் நன்கு அறிவோம். சொந்த கணக்குகளில் வைப்பிலிடுவதில் அவர்களுக்கு நிகர், அவர்களே. நாட்டுக்கான நிதியை அவர்களுக்கு திரட்ட தெரியாது.

நாட்டுக்காக நிதியை திரட்டும் முறைமை, நாட்டின் கடனைச் செலுத்த பணம் தேடும் முறைமை தொடர்பில் அவர்களுக்கு தெளிவு உள்ளதா என்பது தொடர்பான கேள்வி இப்போதும் எழுகிறது.

நாட்டின் நெருக்கடிக்கு பிரதான காரணம் கொரோனா என தொடர்ச்சியாக அரசாங்கம் தெரிவிக்கிறது, கொரோனா இல்லாவிட்டால் எமக்கு இந்த நெருக்கடி இல்லை என்கின்றனர்.

அத்தியாவசிய பொருட்கள் பலவற்றின் இறக்குமதி, கட்டுமானப் பணிகளுக்கான மூலப் பொருள்கள் இறக்குமதி தடை செய்யப்பட்டுள்ளன. அவ்வாறு செய்தும் டொலர் நெருக்கடியிலேயே நாம் இருக்கிறோம்.

அரசாங்கம் இந்த நெருக்கடி தொடர்பில் எதிர்வரும் மாதங்களுக்கு எவ்வாறு செயல்படப் போகின்றது என்பதை, நாட்டுக்கு சொல்ல வேண்டும். இப்போது ராஜபக்ஷ வியாபார நிறுவனம், தனிப்பட்ட சொத்தாகக் கருதி எமது நாட்டின் வளங்களை விற்கின்றது. இதுவா அரசாங்கத்தின் கொள்கை,என நாம் கேட்கின்றாம்.

கோட்டாபய, ஜனாதிபதி ஆனதும் மெஜிக் செய்வார் என்றனர். ஆனால், நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷ நிதிப் பிரச்னையைத் தீர்ப்பார் என்று இப்போது சொல்கின்றனர்.

அவரின் அமெரிக்கா முறையைப் பயன்படுத்தியாவது இந்த நெருக்கடிக்கு பதில் சொல்ல வேண்டும்-என்றார்.

# தனிமைப்படுத்தல் சட்டம் எவருக்குமே விதிவிலக்கானதல்ல

## சுகாதார அமைச்சர் கூறுகிறார்

கொழும்பு, ஜுலை 17

தனிமைப்படுத்தல் சட்டம் எவருக்கும் விதிவிலக்கானது அல்ல என சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாரச்சி தெரிவித்துள்ளார்.

நாட்டில் தொடர்ச்சியாக இடம்பெறும் போராட்டங்கள் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.அவர் மேலும் தெரிவிக்கையில்-

கொரோனா தனிமைப்படுத்தல் சட்டங்களை மீறுபவர்களை கைது செய்யுமாறு பொலிஸாருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. தனிமைப்படுத்தல் சட்டத்துக்கு நாட்டு மக்கள் அனைவரும் கட்டுப்பட வேண்டும்.

இச்சட்டம், ஜோசப் ஸ்டாலின், பியுமி ஹன்சமாலி ஆகியோருக்கு மாத்திரம் விதிவிலக்கானது அல்ல.

கொரோனா வைரஸ் தொற்றில் இருந்து பாதுகாத்துக் கொள்ள உலக சுகாதார ஸ்தாபனம் பரிந்துரைத்துள்ள சுகாதார பாதுகாப்பு அறிவுறுத்தல்களை முறையாக பின்பற்றினால் வைரஸ் தொற்றில் இருந்து மீளலாம்.

இதன் காரணமாகவே சுகாதார பாதுகாப்பு அறிவுறுத்தல்கள் கட்டாயமாக்கப்பட்டுள்ளன. கொரோனா விடயத்தில் சுயநலமாக எவரும் செயல்பட முடியாது.

நாட்டு மக்களின் சுகாதார பாதுகாப்பை உறுதிப்படுத்தும் நோக்கில் தனிமைப்படுத்தல் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது. தனிமைப்படுத்தல் சட்டத்துக்கு முரணாக செயற்படுபவர்களை கைது செய்யுமாறு பொலிஸாருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

ஒரு தரப்பினரது பொறுப்பற்ற செயற்பாட்டின் காரணமாக மீண்டும் நெருக்கடியான சூழ்நிலைக்கு செல்லமுடியாது.

கொரோனா தடுப்பூசி செலுத்தும் பணிகள் இன்னும் இரண்டு மாத காலத்துக்குள் நிறைவு பெறும். நாட்டு மக்கள் மத்தியில் அரசியல் ரீதியிலும், சமூகஞ்சார் ரீதியிலும் பல பிரச்னைகள் காணப்படுகின்றன.

பிரச்னைகளுக்குத் தீர்வை பெற்றுக் கொள்வதற்கு போராட்டத்தில் ஈடுப்படும் தருணம் இதுவல்ல, ஆகவே போராட்டங்களில் ஈடுபடுவதை சிவில் தரப்பினரும், தொழிற்சங்கத்தினரும் முழுமையாக தவிர்த்துக் கொள்ள வேண்டும்-என்றார்.

## துமிந்த நாகமுவ உள்ளிட்ட 6 பேர் விடுவிக்கப்பட்டனர்

கொழும்பு, ஜுலை 17

கண்டி- பல்லேகலையில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த முன்னிலை சோசலிஷக் கட்சியின் பிரசார செயலாளர் துமிந்த நாகமுவ உள்ளிட்ட 6 பேர் நேற்று விடுவிக்கப்பட்டனர்.

துமிந்த நாகமுவ, சஞ்சீவ பண்டார, தம்மிக முனசிங்க, சந்திரசிறி லந்தகே, நயனா ரங்கனி,பெனில்டஸ் சில்வா உள்ளிட்டவர்களே நேற்று விடுக்கப்பட்டனர்.

கடந்த 7ஆம் திகதி நடைபெற்ற எதிர்ப்பு நடவடிக்கையில் கலந்து கொண்ட, துமிந்த நாகமுவ உள்ளிட்ட 6 பேர், தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய குற்றச்சாட்டில், கொம்பனித் தெரு பொலிஸாரால் கைது செய்யப்பட்டு, நீதிமன்றில் பிணையில் விடுவிக்கப்பட்ட பின்னர், பொலிஸாரால் தனிமைப்படுத்தலுக்காக பல வந்தமாக அழைத்துச் செல்லப்பட்டிருந்தனர்.

# முல்லைத்தீவு செல்வபுரத்தில் ஆணொருவர் சடலமாக மீட்பு!

முல்லைத்தீவு, ஜுலை 17

மாங்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட செல்வபுரம் பகுதியில் ஆணொருவர் சடலமாக அடையாளம் காணப்பட்டுள்ளதை அடுத்து பொலிஸ் விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்த சடலம் நேற்று அடையாளம் காணப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் எல்லைக்கிராமமான முறிகண்டி செல்வபுரம் பகுதியில் உள்ள வீடு ஒன்றிலேயே இந்த சடலம் அடையாளம் காணப்பட்டுள்ளது.

154ஆம் கட்டை ஏ-9 வீதியில் அமைந்துள்ள வீட்டின் உரிமையாளரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டாரென பொலிஸார் தெரிவித்தனர்.

சடலமாக மீட்கப்பட்ட நபர் 61 வயதுடைய குஞ்சுமோகன் அசோகன் என்ற குடும்பத்தர் என பொலிஸார் குறிப்பிட்டனர்.

அந்த வீட்டில் துர்நாற்றம் வீசுவது தொடர்பில் அயலவர்களால் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது. தகவலுக்கு அமைவாக பொலிஸார் சம்பவ இடத்துக்கு சென்று விசாரணைகளை ஆரம்பித்தனர்.

சடலமாக அடையாளம் காணப்பட்டவரின் மனைவி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறாரெனவும், பிள்ளைகள் தொழில் நிமித்தம் வேறு பிரதேசத்தில் வாழ்ந்து வரும் நிலையில் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

ஆயினும் உயிரிழப்பு தொடர்பில் பொலிஸார் பல்கோண விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

சம்பவ இடத்துக்கு தடயவியல் பொலிஸாரும் வரவழைக்கப்பட்டு விசாரணைகள் இடம்பெற்றது. சம்பவம் தொடர்பான பூர்வாங்க விசாரணைகளை மாங்குளம் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

# ஜோசப் ஸ்டாலின் உயர்நீதிமன்றில் அடிப்படை உரிமைகள் மனு தாக்கல்

கொழும்பு, ஜுலை 17

தனிமைப்படுத்தல் விதிமுறைகளைப் பயன்படுத்தி போராட்டங்களைத் தடுக்க பொலிஸ் மற்றும் சுகாதார அதிகாரிகள் மேற்கொண்ட முயற்சிகள் மக்களின் அடிப்படை உரிமைகளை மீறுவதாக அறிவிக்கக் கோரி இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் நேற்று உயர் நீதிமன்றத்தில் ஓர் அடிப்படை உரிமை மனுவை தாக்கல் செய்தார்.

பொலிஸ்மா அதிபர் சந்தன விக்ரமரத்ன, சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்தன, தலங்கம பொலிஸ் பொறுப்பதிகாரி, மிரிஹானா பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி, சுகாதார அமைச்சர் பவித்ராதேவி வன்னியாராச்சி மற்றும் சட்டமா அதிபர் ஆகியோரை பிரதிவாதிகளாக குறிப்பிட்டுள்ளார்.

மனுவின்படி, ஜோசப் ஸ்டாலின் தொழில் ரீதியாக ஒரு ஆசிரியராவார். சுமார் 30 ஆண்டுகளுக்கும் மேலாக ஆசிரியர் சேவையில் பணியாற்றி வருகிறார்.

உத்தேச கொத்தலாவெல பாதுகாப்பு பல்கலகழக சட்ட மூலத்திற்கு எதிராக ஆர்ப்பாட்டக்காரர்கள் ஜுலை 8 ஆம் திகதி பத்தரமுல்ல சந்தியில் கூடியிருந்தனர்.

மனுதாரர் முற்பகல் 11 மணியளவில், பொலிஸார் எதிர்ப்பாளர்களைக் கலைக்க அதிகப்படியான சக்தியைப் பயன்படுத்தியதுடன் சுமார் 30 நபர்களை கைது செய்தனர்.

கொழும்பு நீதிவானினால் பிணையில் விடுவிக்கப்பட்ட ஆர்ப்பாட்டக்காரர்கள் பின்னர் சுகாதார அதிகாரிகளின் எழுத்துமூல ஆவணம் அல்லது அன்ரிஜென் சோதனை அல்லது பி.சி.ஆர் சோதனை எதுவும் இல்லாமல் முல்லைத்தீவிலுள்ள தனிமைப்படுத்தல் மையத்துக்கு வலுக்கட்டாயமாக அழைத்துச் செல்லப்பட்டனரென மனுதாரர் மனுவில் தெரிவித்துள்ளார்.

## குளவி கொட்டுக்கு இலக்கான

# விசுவமடு மாணவர்கள் 28 பேர் வைத்தியசாலையில் சேர்ப்பு!

முல்லைத்தீவு, ஜுலை 17

விசுவமடு பாரதி வித்தியாலயத்தில் குளவிக்கூட்டிலிருந்த குளவிகள் வெளியேறி கொட்டியதில் மாணவர்கள் 28 பேருக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

நேற்று முற்பகல் குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மாணவர்கள் உடனடியாக மூங்கிலாறு வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்து எண்மர் உடல் நிலைப் பாதிப்பு கூடுதலாகக் காணப்பட்ட நிலையில் புதுக்குடியிருப்பு ஆதார வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர்.




இன்று ஆடிப்பிறப்பு

# தமிழரின் பண்பாட்டு பண்டிகை!

ஆடிப்பிறப்பு என்ற பண்டிகை தமிழ் சமூகத்தில் மிக முக்கியத்துவம் வாய்ந்த பண்டிகையாகும். குறிப்பாக ஈழத் தமிழர்கள் இந்தப் பண்டிகையை தமது கலாசார, பண்பாட்டு முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நிகழ்வாக கொண் டாடி வந்துள்ளார்கள். அன்றைய நாளில் ஆடிக்கூழும், கொழுக்கட்டையும்தான் சிறப்பு உணவுகள். இந்த உணவுகள்தான் ஆடிப்பிறப்பு பண்டிகை கொண்டாட்டத்தின் அடையாளங்கள். இந்த உணவுகள் ஈழத் தமிழ் மக்களின் பண்பாட்டு உணவுகள்.

இம்முறையும் ஆடிப்பிறப்பை ஒட்டி ஈழத்தில் பல வீடுகளில் கூழ்காய்ச்சி, கொழுக்கட்டை அவித்து கொண்டாடினாலும் இதையெல்லாம் கொண்டாட முடியாத நிலையிலும் பல வீடு கள்வெளித்துக் கிடக்கின்றன என்பதே சோகமானது. அதனைவிட ஒன்றுகூட முடி யாதளவுக்கு கொரோனா பரவலும் அச்சுறுத்திக்கொண்டுள்ளது.

சூரியன் வடதிசை நோக்கிச் செல்லும் தை தொடக்கம் ஆனி வரையுள்ள ஆறு மாத காலம் உத்தராயண காலம் எனப்படும். இது தேவர்களுக்கு ஒரு நாளின் பகல் பொழுதாகும். பின்னர், சூரியன் தெற்கு நோக்கிச் செல்லும் காலம் ஆடி முதல் மார்கழி வரையுள்ள ஆறு மாத காலம் தட்சணாயண காலம். இது தேவர்களுக்கு இராப்பொழுதாகும். தட்சணாயணத்தின் ஆரம்ப தினம் ஆடிமாத முதலாம் நாள் ஆகும். இக்காலம் கோடைகால வெப்பம் தணிந்து குளிர்மை படிப்படியாகப் பெருகும் இயல்புடையது. வானியல், அறிவியல் பின்புலத்தை கொண்ட இந்தப் பண்டிகை இயற்கை சார்ந்த வழிபாடாகவும் பரிமாணம் பெறுகிறது.

> **ஆடிப்பிறப்பிற்கு நாளை விடுதலை - என்ற பாடல்தான் ஈழத் தமிழர்களைப் பொறுத் தவரையில் ஆடிப்பு நாளில் நினைவுக்கு வரும். இந்தப் பாடசாலை ஈழப் புலவர்களில் ஒருவரான நவாலியூர் சோமசுந்தரப் புலவர் பாடியுள்ளார். ஆடிப்பிறப்புக்கு ஒரு காலத் தில் விடுமுறை விடுக்கப்பட்டுள்ளது. அந் தளவு முக்கியமான நாளாக ஆடிப்பிறப்பு அமைந்துள்ளது.**



தமிழகத்தில், இந் நாளில் விருந்தாக உண்டு மகிழ்தல், விசேட வழிபாடு செய்தலும் உற்றார், உறவினர்களுக்கு இவ்வுண்டி வகைகளை வழங்கி நல்லுறவைப் பேணலும் வழக்கமாக கடைப்பிடிக்கப்படுகிறது. ஆடி மாதத்தில் ஆற்றுநீர் வளமுள்ள தென்னாட்டு மக்கள் காவிரி போன்ற ஆற்றங்கரைகளில் சித்திரான்னம் உண்டு படகோட் டம் போன்ற கேளிக்கைகளில் பங்குபற்றும் இந்த நாளை ‘ஆடிப்பெருக்கு’ என்றும் ஆடி 18 என்றும் அழைத்து பண்டிகையாகக் கொண்டாடுவர்கள். தற்காலத்திலும் தமிழகத் தலைநகர் சென்னையில் ஆடிப்பெருக்கு கொண்டாடும் வழக்கம் இருக்கிறது.

ஆடி விதை தேடி விதை
ஆடிக்காற்றில் அம்மியும் பறக்கும்
ஆடி ஆவணி ஆன புரட்டாதி
காடி தோய்த்த கனபனங் காயத்தைத்
தேடித் தேடித் தினமும் புசிப்பவர்
ஓடி யோடி யுலகெலாம் பீச்சுவர்

இப்படி தமிழக பழைய பாடல்களில் எழுதப்பட்டுள்ளமை தமிழகத்தில் ஆடிப்பிறப் பிற்குள்ள முக்கியத்துவத்தை வெளிப்படுத்துகின்றது.

ஆடிப்பிறப்பிற்கு நாளை விடுதலை - என்ற பாடல்தான் ஈழத் தமிழர்களைப் பொறுத்தவரையில் ஆடிப்பு நாளில் நினைவுக்கு வரும். இந்தப் பாடலை ஈழப் புலவர்களில் ஒருவரான நவாலியூர் சோமசுந்தரப் புலவர் பாடியுள்ளார். ஆடிப் பிறப்புக்கு ஒரு காலத்தில் விடுமுறை விடுக்கப் பட்டுள்ளது. அந்தளவு முக்கியமான நாளாக ஆடிப்பிறப்புஅமைந்துள்ளது. அதாவது தை முதல் நாளையும் ஆடி முதல் நாளையும் ஈழத்தவர்கள் கொண்டாடுகின்றனர். ஓர் ஆண்டின் தொடக்கத் தையும் அரை ஆண்டின் தொடக்கத்தையும் கொண் டாடுகின்றனர். இங்கு முதல் அரையாண்டு தேவர்க ளுக்குரியதென்றும் இறுதி அரையாண்டு பிதிர்க ளுக்கு உரியது என்றும் ஓர் ஐதீகம் இருக்கிறது.

கற்கடகம் என்பது ஆடி மாத்தின் பழைய தமிழ் பெயராகும். ஆடி முதல் நாளை தமிழர்கள் வரவேற்கும் விழாவே ஆடிப்பிறப்பு. இப் பண்டி கையின் போது தேங்காய் சுடுதல் என்ற உணவுப் பழக்கமும் தமிழர்களிடம் காலம் காலமாக நிலவிவந்துள்ளது.

தேங்காய் நாரை முற்றிலும் உரித்துவிட்டு நன்றாக உருட்டியபின், தேங்காயின் 3முகங்களில் ஒன்றில் மட்டும் துளையிட்டு தேங்காய் நீரை ஒரு பாத்திரத் தில் பிடித்து வைத்து, பாசிப்பருப்புடன்,



பொட்டுக்கடலை, எள்ளு, வெல்லம், சிறிதளவு உப் பிட்டு அரைத்தெடுத்து. தேங்காயின் ஒரு துவாரத் தின் வழியாக அடைத்து சிறிது தேங்காய் நீரை ஊற்றியபின் இதுவாரத்தை மஞ்சளிட்டு அடைத்து வாதனங் குச்சியை துவாரத்தில் சொருகி தேங்காயை தீயில் சுட்டபின் கடவுளுக்கு படைத்தபின் உடைத்து குடும்பத்துடன் சாப்பிடும் வழக்கம் தமிழ்நாட்டில் காணப்பட்டுள்ளது.

ஆடிப்பிறப்பன்று, வாணவேடிக்கைகள், வேனில் விழாக்கள், களியாட்ட நிகழ்வுகள், பட்டம் விடுதல் முதலிய நிகழ்வுகளில் ஈழத்தவர்கள் ஈடுபட்டனரென மூதாதையர்களின் நினைவுக்குறிப்புக்களை அடிப் படையாகக் கொண்டு சொல்லப்படுகிறது. சிறுவர்க ளும் முதியவர்களும் இணைந்து கூடிக் கொண்டாடி மகிழும் ஒரு நிகழ்வாக ஆடிப் பிறப்புகாணப்படுகி றது. நாவாலியூர் சோமசுந்தரப் புலவரின் ஆடிப் பிறப்புக்கு நாளை விடுதலை என்ற பாடல் ஆடிப் பிறப்பின் கொண்டாட்டம், களியாட்டம், பண் பாட்டு முக்கியத்துவம், கலாசார செழிப்பு என்று பல்வேறு முக்கிய அம்சங்களை வெளிப்படுத்துகிறது.

இம்முறை கொரோனா காலத்தில் ஆடிப்பிறப்பு வருவதால் அதற்கேற்ற வகையில் இன்றைய தினத்தை வீடுகளில் இருந்தவாறே குடும்பங்களுடன் குதூகலமாகக் கொண்டாடுவோம். ●

# அவுஸ்திரேலியரையே திணறடிக்கும் எல்லைக் கட்டுப்பாடு

■ நியூசிலாந்து சிற்சபேசன்

கொரோனாப் பேரிடரைக் கையாள்வதில், எல்லைக்கட்டுப்பாட்டுடன் கூடிய கட்டாயத்தனிமைப்படுத்தல் முறைமை, அவுஸ்திரேலியாவுக்கு வழங்கிய பங்களிப்பு கணிசமானதாகும். சர்வதேச வருகையாளரின் எண்ணிக்கையை, எல்லைக் கட்டுப்பாடு நெறிப்படுத்துகின்றது. சர்வதே சவருகையாளர் தொற்றுக்கு உட்பட்டவரா என்பதை, இரண்டு வாரக் கட்டாயத் தனிமைப்படுத்தல் அடையாளப் படுத்துகின்றது. இரண்டுமே கடினமான பணிகளாகும். அதிலும்கூட, கட்டாயத் தனிமைப்படுத்தலின் ஒழுங்கமைப்பு இலகுவானதல்ல. தங்குமிடம், அங்கு பேணவேண்டிய பொதுச்சுகாதாரம், தனிமைப்படுத்தல் வளாகத்தின் பாதுகாப்பு போன்ற இன்னோரன்ன கனதியான தேவைகளைக் கொண்டதாகும். கட்டாயத்தனிமைப்படுத்தலுக்குரிய இடவசதி மட்டுப்படுத்தப்பட்டதாகும். அதற்கேற்ற வகையிலேயே, சர்வதேச வருகையாளரின் எண்ணிக்கை

**“சர்வதேச வருகையாளரின் எண்ணிக்கையை மட்டுப்படுத்துவதன் மூலமாக பல்வேறு புதிய பிரச்சினைகளும் உருவாகின்றன. பயணிகள் எண்ணிக்கை குறையும் போது விமானக் கம்பெனிகளுக்கு வருவாய் இழப்பு ஏற்படுகின்றது. அதனை ஈடுசெய்வதற்காக, பயணக் கட்டணங்கள் அதிகரிப்பதற்கான வாய்ப்பு உருவாகின்றது.**

வரையறுக்கப்படுகின்றது. அண்ணளவாக ஆறாயிரம் என்ற அளவிலேயே, சர்வதேச வருகையாளரின் எண்ணிக்கையை அவுஸ்திரேலியா பேணிக்கொண்டது.

பேரிடரைக் கையாள்வதில் முக்கியபங்கு வகிக்கின்ற கட்டாயத் தனிமைப்படுத்தல் வழியாகவே, அவுஸ்திரேலியாவில் சமூகப் பரவல் ஏற்படுவது ஒருவகையில் குரூரமான யதார்த்தமாகும். அதனால், கட்டாயத் தனிமைப்படுத்தலின் பராமரிப்புத் தொடர்பிலான கேள்விகள் அடிக்கடி எழுகின்றன. கட்டாயத் தனிமைப்படுத்தலில் அடையாளமாகின்ற 200 தொற்றுக்கு ஒன்று என்ற அளவில் சமூகப்பரவல் ஏற்படுவதாக, மெல்பர்ன் மற்றும் நியூசிலாந்தின் ஒட்டாகோ பல்கலைக்கழக ஆய்வுகள் சொல்கின்றன. சமூகப்பரவல் ஏற்படும்போதெல்லாம், கட்டாயத் தனிமைப்படுத்தலின் பராமரிப்புக் குறித்த அதிருப்தி சமூகத்தில் அதிகரிக்கின்றது. அதுவே, சர்வதேச வருகையாளர் குறித்த கவனத்தையும் ஏற்படுத்துகின்றது.

சர்வதேச வருகையாளரின் தனிப்பட்ட சூழ்நிலைகள் கவனிக்கப்படுவதில்லை. மாறாக, சர்வதேச வருகையாளரே சமூகப்பரவலுக்கு காரணமாகின்றனர் என்பதே துருத்திக்கொண்டு தெரிகிறது. அதனால், சர்வதேச வருகையாளர் மீதான சீற்றம் படிப்படியாக அதிகரிக்கின்றது. கட்டாயத் தனிமைப்படுத்தல் வழியாக ஏற்படுகின்ற சமூகபரவலின் நதிமூலம் ரிஷிமூலம் தேடிமுடிந்தபாடில்லை. அதனாலேயே, கட்டாயத் தனிமைப்படுத்தலுக்கு உட்படுகின்றவர்களைக் குறைப்பதன் மூலமாக, சமூகப்பரவல் ஏற்படுவதற்கான நிகழ்தகவைக் குறைக்கலாம் என்பதில் கவனம் குவிந்தது. குயின்ஸ்லாந்து, விக்டோரியா, மேற்கு அவுஸ்திரேலியா மாநிலங்கள் அதனையே வலியுறுத்தின. மொத்த சனத்தொகையில் கணிசமானவர்களுக்கு தடுப்பூசிவழங்கல் பூர்த்தியாகும் வரையில், சர்வதேச வருகையாளரின் அளவைக் குறைக்கவேண்டும் என்னும் கருத்து பரவலாக வலுப்பெற்றது.

நாயகன் படத்தில் வேலுநாயக்கர் சொல்வதுபோல் “நாலுபேருக்கு நல்லது செய்யணும்னா, எதுவுமே தப்பில்லை” என்ற பாணியில், பெருந்தொகையானவர்களை லொக்டவுனுக்கு உட்படுத்தாமல் இருக்கவேண்டுமானால், சர்வதேச வருகையாளரின் எண்ணிகையைக் குறைக்க வேண்டும் என்பதை விக்டோரியாத் தலைமை அமைச்சர் வலியுறுத்தினார்.

சனத்தொகையில் கணிசமானவர்களுக்குத் தடுப்பூசி முழுமையாக வழங்காத சூழ்நிலையில், எல்லைகளை அகலத் திறப்பது ஆபத்தானது என்பதை துறைசார் வல்லுனர்களும் வலியுறுத்தினர். அத்தகைய சூழ்நிலை தவிர்க்கப்படாவிடில், பாரியளவிலான தொற்றுப் பரவலையும் உயிரிழப்புக்களையும் எதிர்கொள்ள வேண்டிய சூழ்நிலை ஏற்படலாம் என்பதே வல்லுனர்களின் கணிப்பாகும்.

கடந்த இரண்டு மாதங்களில் ஏற்பட்ட சமூகப் பரவலும், அதனால் ஏற்பட்ட லொக்டவுனின் வீரியமும் சர்வதேச வருகையாளரின் எண்ணிக்கை குறித்த தீர்மானத்தின் அவசியத்தை வலியுறுத்தின. அதே வேளையில், சர்வதேச வருகையாளரின் எண்ணிக்கையைக் குறைப்பது தொடர்பிலான துறைசார் வல்லுனர்களின் ஆலோசனையையும் அரசு கவனத்தில் கொண்டது. அவுஸ்திரேலியப் பிரதமரும், மாநிலத் தலைமை அமைச்சர்களும் கூடிப்பேசினார்கள். விளைவு: யூலை நடுப்பகுதி முதல், சர்வதேச வருகையாளர் எண்ணிக்கையில் ஐம்பது விழுக்காடு குறைப்பதாக அரசு அறிவித்தது.

சர்வதேச வருகையாளரின் எண்ணிக்கைக் கட்டுப்பாடுகளினால் முப்பதினாயிரம் வரையான வெளிநாடுவாழ் அவுஸ்திரேலியர்களே பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். நாடு திரும்புவதற்காக, நீண்ட காலம் காத்திருக்க வேண்டிய சூழ்நிலை கடந்த ஒரு வருடமாகவே காணப்படுகின்றது. அதனால், சொல்லொணாத் துயரை எதிர்கொள்கின்றனர். வெளிநாட்டில் வசிப்பதற்கான விசா முடிந்த பின்னரும், சொந்த நாட்டுக்குத் திரும்ப முடியாத சூழ்நிலையில் பலர் அங்கலாய்க்கின்றனர். இடைப்பட்ட காலத்தில் நாடற்றவர்கள் என்னும் நிலையை மனத்தளவிலேயேனும் பெற்றுவிடுகின்றனர். அதுவே மனிதவுரிமைக் கவுன்சிலில் முறையீடு என்பது வரையில் விவகாரத்தைப் பூதாகரமாக்கியுள்ளது. யூலையில் அறிவிக்கப்பட்ட சர்வதேச வருகையாளரின் எண்ணிக்கைக் குறைப்பு சூழ்நிலையை மேலும் சிக்கலாக்குகின்றது.







சர்வதேச வருகையாளரின் எண்ணிக்கையை மட்டுப்படுத்துவதன் மூலமாக பல்வேறு புதிய பிரச்சினைகளும் உருவாகின்றன. பயணிகள் எண்ணிக்கை குறையும்போது விமானக் கம்பெனிகளுக்கு வருவாய் இழப்பு ஏற்படுகின்றது. அதனை ஈடுசெய்வதற்காக, பயணக் கட்டணங்கள் அதிகரிப்பதற்கான வாய்ப்பு உருவாகின்றது. சரக்குப் போக்குவரத்து மூலமாக, பயணிகளின் எண்ணிக்கைக் குறைவினால் ஏற்படக்கூடிய வருவாய் இழப்பை ஈடுசெய்யலாமே என்றும் ஒருவாதம் முன்வைக்கப்படுகின்றது. எப்படிப்பார்த்தாலும், இலாபநட்ட அடிப்படையிலேயே விமானக் கம்பெனிகள் இயங்குகின்றன என்பதே யதார்த்தமாகும். அதனால் காலப்போக்கில், அவுஸ்திரேலியாவுக்கான வாராந்திர விமானச் சேவை அளவுகள் குறைவதற்கான வாய்ப்புக்களே தென்படுகின்றன. அதனுடைய தொடர்ச்சியாக, தேவை மற்றும் வழங்கல் (டிமான்ட் ரூ சப்பிளை) விதிப்படி பயணக் கட்டணங்கள் அதிகரிக்கலாம். எது எப்படியாகிலும், விமானச் சேவை மாற்றங்களினால் சர்வதேசவருகையாளரே மேலதிக பாதிப்பை எதிர்நோக்கக்கூடிய சூழ்நிலையே தென்படுகின்றது.

இத்தகைய பின்னணியிலேயே, அவுஸ்திரேலிய அரசின் பேரிடர்காலப் பணிகள் வேகமடைகின்றன. தடுப்பூசி வழங்கலைத் துரிதப்படுத்துவதற்கான முயற்சிகள் முடுக்கிவிடப்படுகின்றன. வெளிநாடுவாழ் அவுஸ்திரேலியர் துரிதமாக நாடு திரும்புவதற்கான ஏற்பாடுகளில் கவனம் செலுத்தப்படுகின்றது. அதன்பொருட்டு, மேலதிக தனிமைப்படுத்தல் ஒழுங்கு, டார்வினுக்கு அருகே ஹவார்ட் ஸ்ப்ரிங்க்ஸ் பகுதியிலே ஏற்பாடாகின்றது. குறைந்த எண்ணிகையிலான பயணிகளுடன் விமானங்கள் சேவையை வழங்குவதற்கான மானியங்கள் குறித்துக் கவனிக்கப்படுகின்றது.

இவ்வாறாக பல்வேறு ஒழுங்குபடுத்தல்களை அரசு செய்தாலும்கூட, பேரிடர் காலத்தில் அளவில்லாத வகையில் தேவைகள் விரிவடைகின்றன. அதனால் அரசின் நடவடிக்கை, யானைப் பசிக்குக் கிடைத்த சோளப்பொரியாகின்றது. ஆனாலும் யதார்த்தத்தில், பேரிடலிருந்து தேசத்தைப் பாதுகாப்பதற்கான அனைத்து முயற்சிகளையும் அரசு மேற்கொள்கின்றது. பேரிடர் காலமொன்றில் மக்கள் எதிர்கொள்ளும் இடர்களையும் அரசு கூர்ந்து செவிமடுக்கின்றது. அவைகளைச் சீர்செய்வதற்கான முயற்சிகளையும் மேற்கொள்கின்றது. அதுவே நம்பிக்கைகளை வலுப்படுத்துகின்றன. ■

# புலமைச் சிகரம்

**ஆண்டு 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி**

**மாதிரிப் பரீட்சை வினாத்தாள் - II** **நேரம் - 45 நிமிடம்**

**14)** **பின்வரும் சிங்களச் சொற்களுக்குரிய தமிழ்க் கருத்தை எழுதுக.**

i) தும்ரிய ஸ்தானய : ..........................................

ii) தே பொன்ன : .......................................... (2 x 1 =2 புள்ளிகள்)

❖ **பின்வரும் தமிழ்ச் சொற்களுக்குரிய சிங்கள உச்சரிப்பைத் தமிழில் எழுதுக.**

அதிபர் : ..........................

பதினைந்து : ..........................

(2 x 1 =2 புள்ளிகள்)

**15)**

| | | |
|---|---|---|
| 5 | | 1 |
| | 7 | |
| 0 | | 8 |

i) அடைப்பினுள் தரப்பட்ட இலக்கங்களைப் பயன்படுத்தி ஆக்கக் கூடிய மிகப்பெரிய எண்ணைச் சொற்களில் எழுதுக.

..........................................

ii) அடைப்பினுள் உள்ள இலக்கங்களைப் பயன்படுத்தி ஆக்கக் கூடிய மிகச்சிறிய எண்ணை விரித்து எழுதுக.

..........................................

**16)** பின்வரும் எண்களை ஏறுவரிசையில் எழுதும் போது நடுவில் வரும் எண்ணின் இலக்கங்களின் கூட்டுத்தொகை யாது?

6357, 4349, 8937..........................................

**17)** குமரன் கடைக்குச் சென்று 20 முட்டைகளை வாங்கினான். வரும் வழியில் $\frac{2}{5}$ பங்கு முட்டைகள் உடைந்தன எனின்,


i) உடையாத முட்டைகள் எத்தனை? ..........................

ii) உடைந்த முட்டைகள் எத்தனை? ..........................

**18)** i தொடக்கம் xx வரையான உரோம எண்களை எழுதும்போது நான்கு குச்சிகளைப் பயன்படுத்தி அமைக்கக்கூடிய உரோம எண்களை எழுதுக.

..........................................

**19)**



i) நிழற்றப்பட்ட பகுதியை தசமத்தில் எழுதுக.

..........................................

ii) உருவில் அரைவாசிப்பகுதியை நிழற்ற இன்னும் எத்தனை கட்டங்கள் நிழற்றப்பட வேண்டும்.

..........................................

**20)** ஒரு நோயாளிக்கு தினமும் மூன்று வேளை இரண்டு மாத்திரைகள் வீதம் வழங்கப்படுகின்றன. எனின் வாரம் ஒன்றிற்குத் தேவையான மாத்திரைகள் எத்தனை?

..........................................

**21)** பின்வரும் உருவத்திற்கு வரையக் கூடிய சமச்சீர் அச்சுக்களை வரைந்து காட்டுக.


**22)** பின்வரும் விலைப்பட்டியலைப் பூரணப்படுத்துக.

| பொருள் | பொருளின் விலை | செலுத்திய பணம் | மீதிப் பணம் |
|---|---|---|---|
| பென்சில் | ரூ. 10.50 | ரூ. 20.00 | ரூ. .................... |
| உணவுப் பெட்டி | ரூ. 28.00 | ரூ. 50.00 | ரூ. .................... |
| போத்தல் | ரூ. 257.00 | ரூ. 300.00 | ரூ. .................... |
| புத்தகம் | ரூ. 12.75 | ரூ. 20.00 | ரூ. .................... |

**23)** நான்கு பாடசாலைகள் 420 புத்தகங்களைச் சமமாகப் பகிர்ந்து கொண்டனர் எனின், ஒரு பாடசாலைக்குக் கிடைத்த புத்தகங்கள் எத்தனை?

..........................................

**24)**




அருகிலுள்ள A பாத்திரத்திற்குள் B என்ற பாத்திரத்தினால் 3 தடவைகள் நீரூற்றப்பட்டன. எனின் மேலதிகமாக வெளியேறும் நீரின் அளவு யாது?

..........................................

**25)** தரப்பட்ட எண்கோலத்தை அவதானித்து இடைவெளியை நிரப்புக.

i) 1, 4, 9, 16, ----------, ------------

ii) 3, 5, 7, 9, --------, -----------

**26)** புகையிரத நிலையமொன்றிலிருந்து பி.ப 2.45 இற்கு புறப்பட வேண்டியிருந்த புகையிரதம் 30 நிமிடங்கள் தாமதமாகிப் புறப்பட்டன.


i) புகையிரதம் புறப்பட்ட நேரம் யாது?..........................

ii) புகையிரதம் புறப்பட்ட நேரத்தை நியம நேரமாக எழுதுக. ..........................

**27)** அம்மா பணியாரங்களைத் தயாரிப்பதற்கு 2l பாணியைக் கொண்டு வந்தார். அவற்றில் 1l 500 ml பாணி பயன்படுத்தப்பட்டது. எஞ்சிய பாணியின் அளவினை மில்லிலீற்றரில் எழுதுக?

..........................................


**28)** பென்சிலின் நீளத்தை mm இல் எழுதுக.



..........................................

**29)** வரைபை அவதானித்து விடை எழுதுக.

| பூக்கள் | எண்ணிக்கை |
|---|---|
| மல்லிகை | 04 |
| ரோஜா | 02 |
| செவ்வரத்தை | ....... |
| செவ்வந்தி | 03 |




i) வரைபை அவதானித்து அட்டவணையைப் பூரணப்படுத்துக.

ii) செவ்வந்தியை விரும்புவோரின் எண்ணிக்கையை வரைபில் குறித்துக் காட்டுக.

(30 புள்ளிகள்)

# விபசார விடுதிகள் முற்றுகை; 10 பேர் வசமாக சிக்கினார்கள்

கொழும்பு, ஜூலை 17

பம்பலப்பிட்டி, நாரஹேன்பிட்டி ஆகிய பகுதிகளில் மசாஜ் நிலையம் என்ற பேரில் இயங்கி வந்த இரு விபசார விடுதிகளை முற்றுகையிட்டுள்ள பொலிஸார், சந்தேகத்தின் பேரில் 10 பேரைக் கைது செய்துள்ளனர்.

இதற்கமைவாக பம்பலப்பிட்டி பொலிஸ் பிரிவு, கொழும்பு - 04 பிரதேசத்தில் மசாஜ் நிலையம் என்ற பேரில் இயங்கி வந்த விபசார விடுதியை சுற்றிவளைத்த கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவினர், ஐவரைக் கைதுசெய்துள்ளனர்.

கொழும்பு குற்றப் புலனாய்வுப் பிரிவினர் பெற்றுக் கொண்ட நீதிமன்ற உத்தரவுக்கு அமைவாக குறித்த நிலையம் நேற்றுமுன்தினம் இரவு முற்றுகையிடப்பட்டுள்ளது.

இதன்போது குறித்த நிலையத்தை நடத்திச் சென்ற நபர் ஒருவரும், நான்கு பெண்களுமே கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

எஹலியகொட பிரதேசத்தைச் சேர்ந்த 30 வயது நபரும், எல்பிட்டிய, பத்தரமுல்ல, நொச்சியாகம, பெந்தொட்டை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 26, 27, 29, 34 வயதுடைய பெண்களுமே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களை மேலதிக விசாரணைகளின் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்குப் பொலிஸார் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

இதேவேளை, ஹெவ்லொக் வீதி, நாரஹேன்பிட்டிப் பிரதேசத்தில் மசாஜ் நிலையம் என்ற பேரில் இயங்கிவந்த மற்றுமொரு விபசார விடுதியைக் கொழும்பு குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நேற்றுமுன்தினம் இரவு சுற்றிவளைத்துள்ளதுடன் ஐவரைக் கைதுசெய்துள்ளனர்.

குறித்த மசாஜ் நிலையத்தை நடத்திச் சென்ற கிரில்லவல பிரதேசத்தைச் சேர்ந்த 33 வயதுடைய நபரும், பண்டாரகம, இரத்தினபுரி, யாழ்ப்பாணம், வத்தளை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 24, 27, 33, 41 வயதுடைய பெண்களுமே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்களை மேலதிக விசாரணைகளின் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்குப் பொலிஸார் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர். (இ)

# கொரோனாவிலும் அரசியல் நடத்தும் அரசு; வாழ வழியில்லாமல் பேரவலத்தில் மக்கள்

## அஜித் மானப்பெரும எம்.பி. சீற்றம்



**கொழும்பு , ஜூலை 17**

**"கொரோனாவிலும் இந்த அரசு அரசியல் நடத்துகின்றது. மக்கள் வாழ வழியில்லாமல் பேரவலத்தில் உள்ளனர். இவற்றுக்கு எதிராகப் போராடுபவர்கள் கைதுசெய்யப்படுகின்றனர். தனிமைப் படுத்தல் நடவடிக்கையைக்கூட ஒடுக் குமுறை செயல்பாடாக அரசு கையாண்டு வரு கின்றது."**

**- இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் அஜித் மானப்பெரும குற்றஞ் சாட்டினார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"கொரோனா நெருக்கடி ஒருபுறம், பொருளாதார சிக்கல் மறுபுறம். இன்று பொருட்களின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது. கட்டுப்பாட்டு விலை அறிவிக்கப்பட்டாலும் அது நடைமுறைப்படுத் தப்படுவதில்லை. 5 ஆயிரம் ரூபாய் கொடுப்பனவும் முறையாக முன்னெடுக்கப்படவில்லை. கப்பல் பற்றி எரிந்ததால் மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது. நட்டஈட்டைப் பெறுவதற்காக சுற்றுச்சூழலை நாசமாக்கியுள்ளனர். விவசாயிகளுக்கு உரமும் இல்லை.

தடுப்பூசித் திட்டமும் முறையாக முன்னெடுக்கப்படுவதில்லை. துறைமுக நகரத்தை சீனாவுக்கு ஏற்றவகையில் செயற்படுத்துவதற்கு அனுமதி வழங்கியதாலேயே தடுப்பூசி வழங்குவதில் இந்தியா இழுத்தடிப்புச் செய்து வருகின்றது என நம்புகின்றோம். அமெரிக்காவையும் பகைத்துக் கொண்டுள்ளோம்.

எரிபொருட்களின் விலை தற்போது அதிகரிக்கப்பட்டுள்ளது. 2020 இல் எரிபொருள் மூலம் அரசுக்கு உச்ச இலாபம் கிடைத்தது. நிதியம் உருவாக்கப்படும் எனக் கூறப்பட்டது. அதற்கு என்ன நடந்தது எனத் தெரியவில்லை.

இதற்கிடையில் இலவசக்கல்வியைத் தனியார் மயப்படுத்துவது மட்டுமல்ல தற்போது இராணுவ மயப்படுத்துவதற்கான திட்டமும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். வாழ வழியில்லை. இவற்றுக்கு எதிராகப் போராடுபவர்கள் கைது செய்யப்படுகின்றனர். தனிமைப்படுத்தல் நடவடிக்கை அடக்குமுறைச் செயல்பாடாக மாறியுள்ளது. கொரோனாவுக்குள் என்னவெல்லாம் செய்யலாமோ, அவற்றையெல்லாம் அரசு செய்கின்றது" - என்றார். (இ)

# ஒக்ரோபர் 15 இற்குள் நாடு வழமைக்கு; இந்த இலக்குடனேயே தடுப்பூசி திட்டம்

## இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமண தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 17

"எதிர்வரும் ஒக்ரோபர் 15ஆம் திகதிக்குள் நாட்டை இயல்பு நிலைக்குக் கொண்டுவரும் இலக்குடன் கொரோனாத் தடுப்பூசித் திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. அத்துடன் 18 - 30 வயதுக்கிடைப்பட்டவர்களுக்கும் தடுப்பூசி பெற்றுக்கொடுக்கப்படும்."

- இவ்வாறு மருந்து உற்பத்தி, விநியோகம் மற்றும் ஒழுங்குபடுத்தல் இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமண தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

"30 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு இவ்வருடத்துக்குள் தடுப்பூசி பெற்றுக்கொடுப்பதே எமது ஆரம்ப திட்டமிடலாக இருந்தது. எனினும், ஓகஸ்ட் 31 ஆம் திகதிக்குள் இந்த இலக்கை அடைவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு இரு வாரங்களுக்கு முன்னர் ஜனாதிபதி எமக்குப் பணிப்புரை விடுத்தார். தற்போதைய நிலைவரப்படி அந்த இலக்கை அடையக்கூடியமட்டத்திலேயே நாம் இருக்கின்றோம்.

ஓகஸ்ட் 31ஆம் திகதி இலக்கை அடைந்தால், ஒக்ரோபர் 15 ஆம் திகதிக்குள் ஏதேனும் விதத்தில் நாட்டை இயல்பு நிலைக்குக் கொண்டுவர வேண்டும். பாடசாலைகள் திறக்கப்படவேண்டும். ஒக்ரோபர் 15 என்பது எமது ஒரு இலக்குதான். ஏனெனில் 18 - 30 வயதுக் கிடைப் பட்டவர்களுக்கும் தடுப்பூசி ஏற்றவேண்டும். அதேபோல் 12 - 18 வயதுக்கிடைப்பட்டவர்களுக்கான தடுப்பூசித் திட்டமும் உள்ளது" - என்றார்.

# தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய மேலும் 157 பேர் கைது

கொழும்பு, ஜூலை 17

நாட்டில் தனிமைப்படுத்தல் சட்ட விதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் மேலும் 157 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.



இதற்கமைவாக தனிமைப் படுத்தல் சட்ட விதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் இதுவரை கைதுசெய்யப்பட்டோரின் எண்ணிக்கை 50 ஆயிரத்து 184 ஆக அதிகரித்துள்ளது.

தனிமைப்படுத்தல் சட்ட விதிமுறைகளை மீறுவோரைக் கைதுசெய்வதற்கான சுற்றிவளைப்புகள் தொடர்ந்து முன்னெடுக்கப்படவுள்ளன என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் கூறியுள்ளார். (இ)

# நாடு திரும்பிய திகாம்பரம் எம்.பி. சிறிகொத்தவில் இரகசிய பேச்சு

கொழும்பு, ஜூலை 17

தனிப்பட்ட தேவைக்காக வெளிநாடு சென்றிருந்த தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவர் பழனி திகாம்பரம் எம்.பி., நாடு திரும்பிய நிலையில் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தவுக்குச் சென்று முக்கிய சந்திப்பில் பங்கேற்றுள்ளார் என ஊடகங்களில் செய்திகள் வெளியாகியுள்ளன.

ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர் பாலித ரங்கே பண்டாரவைச் சந்தித்து கடந்தகால மற்றும் சமகால அரசியல் நிலைவரங்கள் தொடர்பில் திகாம்பரம் பேச்சு நடத்தியுள்ளார் எனவும் அந்த வட்டாரங்களில் இருந்து அறிய முடிகின்றது.

இன்னும் ஒரிரு நாட்களில் ரணில் விக்கிரமசிங்கவையும் சந்திப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன எனவும் தெரியவருகின்றது.



2015ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலின்போது மைத்திரிபால சிறிசேனவுக்கு ஆதரவு வழங்கிய திகாம்பரத்துக்கு நல்லாட்சியின்போது அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சு பதவி வழங்கப்பட்டது. 2015 இல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் யானை சின்னத்தின் கீழ்தான் திகாம்பரம் போட்டியிட்டார். 2018 இல் நடைபெற்ற உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தொழிலாளர் தேசிய சங்கம் முற்போக்குக் கூட்டணியாக யானை சின்னத்தின் கீழ்தான் களமிறங்கியது.

எனினும், 2020 ஜனாதிபதித் தேர்தலில் திகாம்பரம் சஜித்துக்கு ஆதரவு வழங்கினார். பொதுத்தேர்தலில் தொலைபேசி சின்னத்தில் போட்டியிட்டார்.

தற்போது ஐக்கிய மக்கள் சக்திக்குள் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களுக்கு குறிப்பாக மலையகத் தலைவர்களுக்கு உரிய இடமில்லை என்ற குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

இவ்வாறானதொரு பின்புலத்தில் ஐ.தே.கவுடன் திகாம்பரம் பேச்சு நடத்தியுள்ளமை அரசியல் களத்தில் பரபரப்பாகப் பேசப்படுகின்றது. (இ)

### நாவலப்பிட்டியில் 'மொட்டு'வை ஆதரித்த

# மனோவின் கட்சி உறுப்பினருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை

கொழும்பு, ஜூலை 17

நாவலப்பிட்டி நகர சபையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற வாக்கெடுப்பின்போது ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணிக்கு ஆதரவாக வாக்களித்த கட்சி உறுப்பினர் செந்தூர் குமாருக்கு (சுரேஷ்) எதிராகக் கடும் ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கு மனோ கணேசன் தலைமையிலான ஜனநாயக மக்கள் முன்னணியின் அரசியல் உயர்பீடம் தீர்மானித்துள்ளது.

2018 இல் நடைபெற்ற உள்ளூராட்சி சபைத் தேர்தலின் போது நாவலப்பிட்டி நகர சபையை ஐக்கிய தேசியக் கட்சி கைப்பற்றியது. ஐக்கிய தேசியக் கட்சி இரண்டாகப் பிளவுபட்ட பின்னர் சஜித் அணி ஆதிக்கம் செலுத்தியது.

இந்நிலையில், தவிசாளராகச் செயல்பட்டவர் பதவி நீக்கம் செய்யப்பட்டார். இதனையடுத்து ஏற்பட்ட வெற்றிடத்துக்கு புதிய தவிசாளரைத் தெரிவுசெய்வதற்கான வாக்கெடுப்பு நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இதன்போது 2 மேலதிக வாக்குகளால் 'மொட்டு' கட்சி உறுப்பினர் வெற்றிபெற்றார்.

வாக்கெடுப்பின்போது ஐக்கிய மக்கள் சக்தியின் சார்பில் முன்மொழியப்பட்ட அநுர பெர்னாண்டோவுக்கு ஆதரவு வழங்க வேண்டும் என்ற முடிவை ஜனநாயக மக்கள் முன்னணி எடுத்திருந்தது. எனினும், அக்கட்சியின் நியமன உறுப்பினரான சுரேஷ், மொட்டு கட்சி வேட்பாளருக்கு ஆதரவாக வாக்களித்துள்ளார்.

இந்நிலையிலேயே, அவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (இ)




ஆப்கான் போரில் சிக்கி

# புலிட்சர் விருது வென்ற பத்திரிகையாளர் பலி!

காபூல், ஜூலை 17

ஆப்கானிஸ்தானில் தலிபான் - இராணுவத்தினர் இடையே நடந்த சண்டையில் பிரபல புகைப்பட பத்திரிகையாளர் டேனிஷ் சித்திகி உயிரிழந்தார்.

ஆப்கானிஸ்தானில் அமெரிக்க படைகள் வெளியேறி வருகின்றனர். இந்த நிலையில், தலிபான்களுக்கும் அந்நாட்டு இராணுவத்துக்கும் இடையே பெரும்போர் வெடித்துள்ளது. இதில் சிக்கி ஏராளமானவர்கள் உயிரிழந்துள்ளனர்.

இந்த நிலையில் இந்தியாவை சேர்ந்த பிரபல புகைப்பட பத்திரிகையாளர் சித்திகி, ஆப்கானிஸ்தான் இராணுவத்தினரின் வாகனத்தில் சென்று கொண்டிருந்தபோது தாக்குதலுக்கு இலக்கானதாகவும், அதில் அர்ஷ்டவசமாக உயிர் தப்பினார் என்றும் அவர் தனது ருவிட்டர் பக்கத்தில் காணொலியுடன் பதிவிட்டிருந்தார்.

இந்த நிலையில், கந்தஹாரில் நடந்த போரில் அவர் உயிரிழந்தார்.

பத்திரிகைத் துறையின் உயரிய விருதான புலிட்சர் விருதை பெற்றவர் டேனிஷ் சித்திகி, கொரோனா இரண்டாம் அலையால் இந்தியா எதிர்நோக்கிய பாதிப்புக்கள் சர்வதேச அளவில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தின. அத்துடன், இந்திய விவசாயிகள் போராட்டம். ரொஹிங்கிய முஸ்லிம்கள் தொடர்பான இவரின் புகைப்படங்களும் உலகப் புகழ்பெற்றன.

(ஐ)



# ஆயிரக்கணக்கில் மடிந்த பிளமிங்கோ பறவைகள்!

இஸ்தான்புல், ஜூலை 17

துருக்கியில் ஆயிரத்திற்கும் அதிகமான பிளமிங்கோ பறவைகள் உயிரிழந்தன.

துருக்கியில் கொன்யா என்ற இடத்திலுள்ள டஸ் ஏரி அந்நாட்டின் இரண்டாவது மிகப்பெரிய ஏரியாகும். உவர் நீர் ஏரியான இங்கு ஏராளமான வலசைப் பறவைகள் வந்து செல்வது வழக்கம்.

வறண்டு கிடக்கும் இந்த ஏரியில் கடந்த இரு வார காலமாக ஆயிரத்திற்கும் அதிகமான பிளமிங்கோ பறவைகள் இறந்து கிடக்கின்றன.

டஸ் ஏரிக்கு நீர்வரக்கூடிய பகுதிகளை தடுத்து தங்கள் பகுதிக்கு பாசனத்திற்காக சிலர் தண்ணீரை திருப்பிக் கொண்டதால், ஏரிக்கு தண்ணீர் வராமல் வறண்டு போயிருப்பதாக சூழலியலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இதனால், ஏரி தண்ணீரிலும் உவர் தன்மை பெரிதும் அதிகரித்து, பறவைகளை பறக்க விடாமல் அவற்றின் உயிரை பறித்திருக்கலாம் என்று செல்குக் பல்கலைக்கழக உயிரியல் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

பாசனத்திற்கான தண்ணீர் கொள்கையை தங்கள் வசதிக்கேற்ப மாற்றிக்கொள்வதால், ஏதுமறியாத பிளமிங்கோ பறவைகள் இரையாகிக் கொண்டிருக்கும் பரிதாபம் நிகழ்ந்து வருவதாக சூழலியலாளர்கள் குற்றம் சாட்டுகிறார்கள் .

குழப்பமடைகிறது காலநிலை ஒழுங்கு

# ஐரோப்பாவில் கோடையில் வெள்ளம்: 65 பேர் உயிரிழப்பு; 1,300 பேர் மாயம்!



பெர்லின், ஜூலை 17

வழமைக்கு மாறாகப் பெய்துவரும் கடும் மழை காரணமாக மேற்கு ஐரோப்பிய நாடுகளில் இயற்கை அனர்த்தங்கள் ஏற்பட்டுள்ளன.

ஜேர்மனி, நெதர்லாந்து, பெல்ஜியம், சுவிஸ் போன்ற நாடுகளை பெரு வெள்ளம் பாதித்துள்ளது. இதில் சிக்கி ஜேர்மனியில் 59 பேர் பலியாகினர். 1,300 பேர் வரை காணாமல் போயுள்ளனர். இதே போன்று பெல்ஜியத்தில் 6 பேர் பலியாகினர்.

இதேநேரம், கட்டடங்களும் வாகனங்களும் வெள்ளத்தில் அள்ளுண்டு போயுள்ளன. சமீபகால வரலாற்றில் இருந்திராதவாறு கோடைப் பருவத்தில் கொட்டிய மழையால் ஆறுகள் பெருக்கெடுத்துள்ளன. தாழ்ந்த பிரதேசங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. ஜேர்மனியின் மேற்குப் பகுதியில் மிக மோசமான சேதங்களும், உயிரிழப்புகளும் ஏற்பட்டிருக்கின்றன. ரைன்லாண்ட் - பலாட்டினேட், ரைன் - வெஸ்ட்பாலியா ஆகிய இரு மாநிலங்களிலும் சொத்துக்களுக்குப் பலத்த சேதங்கள் பதிவாகியுள்ளன.

59 பேர்வரை உயிரிழந்தனர். ஆயிரத்து 300 பேர் வரை காணாமல் போயுள்ளனர். ஆறுகள் பெருக்கெடுத்தலால் வெள்ளத்தில் மூழ்கிய மேற்குப் பகுதிகளில் பொலிஸ் ஹெலிக் கொப்டர்களும் படைப் பிரிவுகளும் மீட்டுப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

மேற்கு நகரமான அர்வெய்லெர் என்ற இடத்தில் மட்டும் 19 உடல்கள் மீட்கப்பட்டுள்ளன. எழுபது பேர் காணாமல் போயுள்ளனர். அங்கு அனர்த்த அவசரகால நிலை பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது. ரைன்லாண்ட் - பலாட்டினேட் பிரதேசத்தில் பல்லாயிரக்கணக்கான வீடுகளுக்கு மின்சாரம் துண்டிக்கப்பட்டிருக்கிறது. பொதுப் போக்குவரத்துகளும் தடைப்பட்டுள்ளன.

அமெரிக்கா சென்றிருக்கும் ஜனாதிபதி எங்கெலா மெர்கல் அங்கிருந்தவாறு விடுத்த செய்தியில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்குத் தமது அனுதாபங்களை வெளியிட்டிருக்கிறார். நோர்த் ரைன் - வெஸ்ட்பாலியா மாநிலத்தின் தலைவரும் அடுத்த அதிபர் வேட்பாளருமான அர்மின் லாசெற் வெள்ளப் பாதிப்புகளை நேரில் சென்று பார்வையிட்டிருக்கிறார். புவி வெப்பம் அடைவதால் உருவாகும் காலநிலை மாறுதலே இந்த அனர்த்தத்துக்குக் காரணம் என்று தொடர்புபடுத்தி அவர் கருத்து வெளியிட்டிருக்கிறார்.

பெல்ஜியத்தில் கடந்த சில தினங்களாக பெய்த அடைமழை காரணமாக வலோனியா பிராந்தியத்தில் ஆறுகள் கரை உடைத்துள்ளன. அங்குள்ள லியேஜ், நமுர் ஆகிய நகரங்களில் இருந்து மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்றப்பட்டுள்ளனர். ஜேர்மனியில் இருந்துவரும் வெள்ளம் நெதர்லாந்தின் எல்லையோரம் நதிகளில் கலப்பதால் அவை பெருக்கெடுக்கும் ஆபத்து உருவாகி உள்ளது. சுவிற்சர்லாந்தின் மத்திய கன்ரன்களான பேர்ண், லூசெர்ன் பிரதேசங்களில் என்றும் இல்லாதவாறு ஆறுகளில் நீர்மட்டம் ஆபத்தான அளவில் அதிகரித்து வருகிறது. இன்றும் அங்கு மேலும் மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகிறது.

இவ்வாறு சில ஐரோப்பிய நாடுகள் வெள்ளத்தில் தத்தளிக்க ஸ்பெயின் நாடு மிக மோசமான வெப்ப அனலால் பாதிக்கப்பட்டுள்ளது. அங்கு கடந்த ஞாயிறன்று40 டிகிரி செல்சியஸ் வெப்பநிலை மட்ரிட் நகரில் பதிவாகியுள்ளது.

(ஐ)

# தென்னாபிரிக்கா கலவரம்; இந்தியர்கள் மீது தாக்குதல்!

தென்னாபிரிக்காவில் முன்னாள் ஜனாதிபதி சிறையில் அடைக்கப்பட்டமையை தொடர்ந்து கலவரம் வெடித்துள்ளது. இதில், இந்தியர்கள் மீதான தாக்குதல் அதிகரித்து வருகிறது.

தென்னாபிரிக்க முன்னாள் ஜனாதிபதி ஜேக்கப் ஷூமா ஊழல் வழக்கில் 15 மாத சிறை விதிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து பரவிய கலவரத்தில் 72 பேர் பலியாகினர். 1,200 பேர் வரை கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில், அங்கு இந்தியர்கள் நடத்தும் கடைகள், வணிக வளாகங்கள் குறி வைத்துத் தாக்கப்படுகின்றன. அவர்களின் பணம், பொருட்கள் சூறையாடப்படுகின்றன. கடந்த ஒரு வாரத்துக்கும் மேலாக நீடிக்கும் கலவரத்தில் இந்தியர்கள் மீதான தாக்குதல்கள் அதிகரித்து கொண்டே செல்கிறது.

இந்நிலையில், அங்கு நடக்கும் கலவரங்களால் ஆயிரத்து 400 கோடி இலங்கை ரூபாய் வரை இழப்புகள் ஏற்பட்டுள்ள தாகக் கூறப்படுகின்றது.



# கிணற்றில் தவறி வீழ்ந்த 30 பேரில் மூவர் மரணம்!

புதுடில்லி, ஜூலை 17

இந்தியாவின் மத்திய பிரதேச மாநிலம் விதிஷா மாவட்டத்தில் உள்ள கஞ்ச்பசோதா என்ற கிராமத்தில் குழந்தை ஒன்று கிணற்றில் தவறி விழுந்துள்ளது. அந்த குழந்தையை காப்பாற்றுவதற்காக கிராம மக்கள் கிணற்றின் அருகில் திரண்டு வந்துள்ளனர்.

அப்போது கிணற்றின் சுற்றுச்சுவரில் அதிக பாரம் ஏற்பட்டதால், அது இடிந்து விழுந்துள்ளது. இதனால் கிணற்றின் அருகே நின்று கொண்டிருந்த சுமார் 30 பேர் கிணற்றுக்குள் விழுந்தனர் என்று கூறப்படுகிறது.

இதனால் அந்தப் பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டு, உடனடியாக மீட்புக் குழுவினருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில் கிணற்றில் வீழ்ந்த 3 பேர் உயிரிழந்தனர். 19 பேர் காயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

(ஐ)

ஈழநாடு






# ரோக்கியோ ஒலிம்பிக்: கெர்பரும் விலகினார்!

பெர்லின், ஜூலை 17

ரோக்கியோ ஒலிம்பிக் ரென்னிஸ் போட்டியிலிருந்து பிரபல வீரங்கனையான ஜேர்மனியின் கெர்பரும் விலகினார்.

கெர்பர் மூன்று கிராண்ட்ஸ்லம் பட்டங்களை வென்றுள்ளார். இவர், அண்மையில் லண்டனில் நடந்த விம்பிள்டன் கிராண்ட்ஸ்லம் தொடரில் அரையிறுதி வரை முன்னேறியிருந்தார்.

இந்நிலையில் உடல் சோர்வு காரணமாக ஜப்பானில் வரும் ஜூலை 23ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள ரோக்கியோ ஒலிம்பிக் போட்டியிலிருந்து விலகினார்.

லண்டன் (2012) ஒலிம்பிக்கில் முதன்முறையாக களமிறங்கிய இவர், ரியோ ஒலிம்பிக் (2016) ஒற்றையரில் வெள்ளிப் பதக்கம் வென்றிருந்தார்.

ஏற்கனவே, நடால் (ஸ்பெயின்), பெடரர் (சுவிற்சர்லாந்து), செரீனா வில்லியம்ஸ் (அமெரிக்கா), சிமோனா ஹாலெப் (ருமேனியா) உள்ளிட்டோர் ரோக்கியோ ஒலிம்பிக்கில் இருந்து விலகியமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# ரோக்கியோ ஒலிம்பிக் போட்டி: ஜொகோவிச் பங்கேற்பார்

ரோக்கியோ, ஜூலை 17

ரோக்கியோ ஒலிம்பிக்கில் பங்கேற்பேன் என்று பிரபல ரென்னிஸ் வீரரான ஜொகோவிச் அறிவித்துள்ளார்.

உலகின் மிகப்பெரிய விளையாட்டு போட்டியான ஒலிம்பிக் எதிர்வரும் 23ஆம் திகதி ரோக்கியோவில் ஆரம்பமாகின்றது.

இதனிடையே, ரோக்கியோவில் கொரோனா தொற்று அதிகரித்து வருவதால் பல வீரர்களும் ஒலிம்பிக்கிலிருந்து விலக ஆரம்பித்துள்ளனர்.

முன்னணி ரென்னிஸ் வீரர்கள், வீராங்கனைகள் பலர் விலகியுள்ள நிலையில், அண்மையில் நடந்து முடிந்த விம்பிள்டன் சம்பியன் உட்பட 20 கிராண்ட்ஸ்லம் பட்டங்களை வென்ற ஜொகோவிச் ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்பேன் என்று தெரிவித்துள்ளார். (ஐ)



## இருபது - 20 உலக கிண்ணம்

# தகுதிசுற்றில் இலங்கை அணி! இந்தியா - பாக். ஒரே பிரிவில்!!

டுபாய், ஜூலை 17

இருபது - 20 உலகக்கிண்ணப் போட்டியில் அணிகள் இடம்பெற்றுள்ள பிரிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளது. இதில், இலங்கை அணி தகுதி சுற்றில் போட்டியிட்டு வென்றால் மட்டுமே சுப்பர் 12 சுற்றுக்கு தகுதி பெற முடியும். தகுதிச் சுற்றில் இலங்கை அணி குறூப் ஏ பிரிவில் அயர்லாந்து, நெதர்லாந்து, நமீபியா அணிகளுடன் இடம்பெற்றுள்ளது.

இதுதவிர, இந்தியா - பாகிஸ்தான் அணிகள் ஒரே குறூப் 1 பிரிவில் இடம்பெற்றுள்ளன. இது கிரிக்கெட் ரசிகர்களுக்கு பெரும் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இருபது - 20 உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டி ஐக்கிய அரபு எமிரேட்ஸ், ஓமனில் எதிர்வரும் ஒக்ரோபர் 17 முதல் நவம்பர் 14 ஆம் திகதிவரை இடம்பெறவுள்ளது. இதில், பங்களாதேஷ், இலங்கை, அயர்லாந்து, நெதர்லாந்து, ஸ்கொட்லாந்து, நமீபியா, ஓமன், பப்புவா நியூகினி என 8 அணிகள் முதல் சுற்று ஆட்டத்தில் கலந்துகொள்ளவுள்ளன.




ஒவ்வொரு பிரிவிலும் முதல் இரு இடங்களைப் பிடிக்கும் இரு அணிகள் சுப்பர் 12 சுற்றில் இதர எட்டு அணிகளுடன் சேர்ந்து கொள்ளும். இந்தப் போட்டியில் பங்குபெறும் அணிகளை இருபது - 20 தரவரிசையின் அடிப்படையில் இருபிரிவுகளாக பிரித்துள்ளது ஐ.சி.சி.குறூப் 1 பிரிவில் நடப்பு சம்பியனான மேற்கிந்தியத்தீவுகள், இங்கிலாந்து, அவுஸ்திரேலியா, தென்னாபிரிக்கா மற்றும் தகுதி சுற்றில் தெரிவாகும் இரு அணிகள் இடம்பெறும். இதேபோல குறூப் 2 பிரிவில் இந்தியா, பாகிஸ்தான், நியூஸிலாந்து, ஆப்கானிஸ்தான் மற்றும் தகுதிச்சுற்றில் தெரிவாகும் இரு அணிகள் பங்கேற்கும்.

முதல் சுற்று ஆட்டங்களான தகுதி சுற்றுப் போட்டியில் குறூப் ஏ - இல் இலங்கை, அயர்லாந்து, நெதர்லாந்து, நமீபியா அணிகளும், குறூப் பி - இல் பங்களாதேஷ், ஸ்கொட்லாந்து, ஓமன், பப்புவா நியூ கினி அணிகளும் இடம்பெற்றுள்ளன. (ஐ)




# இந்தியாவுடனான தொடர் குசல் பெரேரா விலகினார்!

கொழும்பு, ஜூலை 17

இந்தியாவுக்கு எதிரான இருபது - 20, ஒருநாள் தொடர்களில் இருந்து இலங்கை அணியின் குசல் பெரேரா விலகியுள்ளார். காயம் காரணமாகவே அவர் இந்தத் தொடர்களில் இருந்து விலகியுள்ளார்.

இலங்கை ஒருநாள் கிரிக்கெட் அணியின் தலைவராக அண்மையில் குசல் பெரேரா நியமிக்கப்பட்டார். இவர் தலைமையேற்ற பங்களாதேஷ் அணிக்கு எதிரான ஒருநாள், இருபது - 20 தொடர்களில் தோல்வியே கிடைத்திருந்தது.

இந்நிலையில், பயிற்சியின்போது தோள்பட்டையில் ஏற்பட்ட காயத்தால் இந்தியாவுக்கு எதிரான தொடர்களில் குசல் பெரேரா பங்கேற்க மாட்டார் என்று இலங்கை கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

இதையடுத்து தசூன் ஷானக அணியின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். இலங்கை - இந்திய அணிகளுக்கு இடையிலான ஒருநாள் தொடர் நாளை ஆரம்பமாகின்றது. (ஐ)

# ஒருநாள் போட்டி தரவரிசை: பாபர் அஸாம் முதலிடத்தில்!

டுபாய், ஜூலை 17

கிரிக்கெட்டின் ஒருநாள் போட்டி தரவரிசையில் பாகிஸ்தான் அணியின் பாபர் அஸாம் தொடர்ந்து முதலிடத்தில் நீடிக்கிறார்.

இங்கிலாந்து - பாகிஸ்தான் இடையிலான 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடர் அண்மையில் நிறைவடைந்தது. இந்தத் தொடரை முழுமையாக இழந்தது பாகிஸ்தான் அணி.

முதலிரு போட்டிகளிலும் பாபர் அஸாம் பெரிதாக சோபிக்கவில்லை. ஆனால், இறுதிப் போட்டியில் 139 பந்துகளில் அவர் 158 ஓட்டங்களை குவித்தார். இதன்மூலம் ஒருநாள் போட்டி தரவரிசையில் தொடர்ந்து முதலிடத்தை அவர் தக்கவைத்துக் கொண்டார்.

பாபர் அஸாம் 873 புள்ளிகளுடன் முதலிடத்தில் தொடர, இந்தியாவின் விராட் கோலி 16 புள்ளிகள் குறைவாக பெற்று 2ஆவது இடத்தில் நீடிக்கிறார். மற்றோர் இந்திய வீரரான ரோஹித் சர்மா 825 புள்ளிகளுடன் 3ஆவது இடத்தில் நீடிக்கிறார். நான்காவது இடத்தில் நியூஸிலாந்தின் றோஸ் ரெய்லரும், ஐந்தாவது இடத்தில் அவுஸ்திரேலியாவின் அரோன் பின்ஞ்சும் நீடிக்கின்றனர். (ஐ)



# தொழிற்சங்க தலைவர்களுக்கு எதிரான அரச அராஜகத்தை அனுமதிக்க முடியாது!

## மலையக ஆசிரியர் முன்னணி கடும் கண்டனம்

**கொழும்பு, ஜூலை 17**

**ஆசிரியர் சங்கங்கங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தொழிற்சங்கத் தலைர்களை மிலேச்சதனமாகவும் அராஜக முறையிலும் அரசு தடுத்து வைத்திருப்பதை ஒரு போதும் அனுமதிக்க முடியாது என மலையக ஆசிரியர் முன்னணி தெரிவித்துள்ளது.**

*அந்த முன்னணியின் செயலாளர் சின்னையா ரவிந்திரன் விடுத்துள்ள கண்டன அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.*

*இலவசக் கல்வி பறிபோகும் வகையில் அரசு சட்டங்களை இயற்றி எதிர்கால சந்ததியினரின் இருப்பைக் கேள்விக்குறியாக்க முயற்சிக்கின்றது.*

*எனவே, அதனைத் தடுக்கும் முயற்சியில் ஆசிரியர் தொழிற் சங்கங்கள் ஈடுபட்டுள்ளன.*

*அந்த முயற்சிகளுக்கு முட்டுக்கட்டை இடும் வகையில், ஆசிரியர் தொழிற்சங்கத் தலைவர்கள் கைதுசெய்யப்பட்டு தனிமைப்படுத்தல் போர்வையில் சட்டவிரோதமாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்று மலையக ஆசிரியர் முன்னணியின் செயலாளர் சின்னையா ரவீந்திரன் தெரிவித்துள்ளார். (இ)*



## முடக்கத்திலிருந்து தம்பாட்டி விடுவிப்பு

*கொழும்பு,ஜூலை17*

*நாட்டில் மேலும் இரண்டு பிரதேசங்கள் தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளன என்று கொரோனா பரவல் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மத்திய நிலையத்தின் தலைவர் இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.*

*அதற்கமைய, யாழ்ப்பாணம், நாரந்தனை வடமேற்கு கிராம சேவகர் பிரிவு (தம்பாட்டி) நேற்றுக் காலை 6 மணி முதல் தனிமைப்படுத்தலில் இருந்து விடுக்கப்பட்டுள்ளது.*

*அத்துடன், புத்தளம், ஜே.பி வீதியின் 9 ஆம் குறுக்குத்தெரு பகுதியும் தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளது என்றும் இராணுவத் தளபதி மேலும் குறிப்பிட்டுள்ளார். (இ)*

# ஐந்தாவது நாளாகவும் தொடர்ந்தது இணையவழி கற்பித்தல் புறக்கணிப்பு

கொழும்பு, ஜூலை 17

இணையவழி கற்பித்தல் நடவடிக்கையில் இருந்து விலகி ஆசிரியர் தொழிற்சங்கங்கள் முன்னெடுத்துள்ள தொழிற்சங்கப் போராட்டம் நேற்று 5ஆவது நாளாகவும் தொடர்ந்தது.

தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டு விடுவிக்கப்பட்டதன் பின்னர் வலுக்கட்டாய இராணுவ முகாமில் தனிமைப்படுத்தப்பட்டுள்ள ஆசிரியர் தொழிற்சங்கங்களின் பிரிதிநிதிகள் விடுவிக்கப்பட வேண்டும் எனக் கோரி இந்தத் தொழிற்சங்க போராட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

இலங்கை ஆசிரியர் சங்கம், இலங்கை ஆசிரியர் சேவை சங்கம் உள்ளிட்ட பல சங்கங்கள் இந்தப் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றன. (இ)

# வாகன விபத்துக்களால் 9 பேர் பரிதாப உயிரிழப்பு

நாட்டில் வாகன விபத்துக்களால் நேற்றுமுன்தினம் மாத்திரம் 9 பேர் உயிரிழந்தனர்.

பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண இதனைத் தெரிவித்துள்ளார்.

உயிரிழந்தவர்களில் அதிகமானோர் மோட்டார் சைக்கிள்களில் பயணித்தவர்கள் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் கூறியுள்ளார். (இ)

# மருதானை பொலிஸ் நிலையத்தில் நேற்று காலை பெரும் தீ விபத்து!

*கொழும்பு, ஜூலை 17*

*கொழும்பு 10, மருதானை பொலிஸ் நிலையத்தில் நேற்றுக் காலை பெரும் தீ விபத்து ஏற்பட்டது.*

*இந்தத் தீப்பரவலைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்காக 3 தீயணைப்பு வாகனங்கள் பயன்படுத்தப்பட்டன என்று கொழும்பு தீயணைப்புச் சேவை திணைக்களம் தெரிவித்தது.*

*மருதானை பொலிஸ் நிலையத்தின் மேல்மாடியிலேயே தீ விபத்து ஏற்பட்டது. எனினும், தீப்பரவல் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது என மருதானைப் பொலிஸார் தெரிவித்தனர்.*

*தீ விபத்துக்கான காரணம் இதுவரையில் தெரியவில்லை எனவும் பொலிஸார் மேலும் கூறினர். (இ)*



# மரண அறிவித்தல்



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 31 - 08 - 1944 | 15 - 07 - 2021 |

## திருமதி கண்மணி நடராசா

யாழ். அனலைதீவு 7ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட கண்மணி நடராசா 15.07.2021 வியாழக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்ற சுப்பிரமணியம் ( விடிவெள்ளியர் ), – விசாலாட்சி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற குமாரசாமி – தெய்வானை தம்பதியரின் அன்பு மருமகளும்,காலஞ்சென்ற நடராசாவின் அன்பு மனைவியும்,

இந்திராணி ( பெறாமகள் – பிரான்ஸ் ) மற்றும் ஜெயந்தினி ( உப அதிபர்– யாழ் அனலைதீவு சதாசிவ மகாவித்தியாலயம்), ஜெய குமார் (அனலைதீவு), ஜெயரஞ்சன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், பாக்கியநாதன் (பிரான்ஸ்), சிவபாலன் (அனலைதீவு), சசிகலா ( அனலைதீவு ) ஆகியோரின் பாசமிகு மாமியும்,லோகநாயகி (பாக்கியம் – கனடா), பசுபதிப்பிள்ளை (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற கதிரவேலு, யோகம்மா (கனடா), மனோன்மணி ( அனலைதீவு ) ஆகியோரின் அன்பு மைத்துனியும், பிரியதர்சினி (கொழும்பு), அருமைரெத்தினம் (கனடா), நிமல்ராஜ், சுபாசினி (பிரான்ஸ்), துஸ்யந்தன், கீர்த்தனா (பிரான்ஸ்), சுசீதரன், அஸ்விகா ( பிரான்ஸ் ) ஆகியோரின் அன்புப் பேத்தியும், வரோதயன், கஜானன், லக்ஸ்மிதா(கொழும்பு), கவிசன், யஸ்வந், சனந்தா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (16-07-2021) வெள்ளிக்கிழமை பி.ப 02 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் அனலைதீவு இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*தொடர்புகளுக்கு :*
**ஜெயரஞ்சன் (மகன்)**
**Mobile : +33758003615**

தகவல்
**குடும்பத்தினர்.**

## ரிஷாத்தின் வீட்டில் பணியாற்றிய

# 16 வயது யுவதியின் மரணம் தொடர்பில் தீவிர விசாரணை

*கொழும்பு, ஜூலை 17*

*அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீனின் வீட்டில் பணியாற்றிக் கொண்டிருந்த போது தீக்காயங்களுக்குள்ளான நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்த 16 வயது யுவதி உயிரிழந்தார்.*

*கொழும்பு, பௌத்தாலோக மாவத்தையிலுள்ள ரிஷாத் பதியுதீனின் வீட்டில் பணியாற்றி வந்த நுவரெலியா, டயகம பகுதியைச் சேர்ந்த குறித்த யுவதி, கடந்த ஜூன் 3ஆம் திகதி தீக்காயங்களுக்குள்ளான நிலையில் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்தார்.*

*இந்நிலையில், சிகிச்சை பலனின்றி குறித்த யுவதி நேற்று முன்தினம் உயிரிழந்தார் என்று பொலிஸ் ஊடகப் பேச் சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.*

*சில மாதங்களுக்கு முன்பு குறித்த யுவதி ரிஷாத் பதியுதீனின் வீட்டில் பணிப்பெண்ணாகச் சேர்க்கப்பட்டுள்ளார்.*

*ஜூன் 3 ஆம் திகதி அவர் சமையலறைக்கு அடுத்ததாகத் தங்கியிருந்த அறையொன்றில் இருந்து உடைகள் தீப்பிடித்த நிலையில் வெளியே வந்தார் எனவும், இதன்போது, வீட்டில் இருந்தோர் அவரை வைத்தியசாலையில் சேர்த்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.*

*யுவதி நேற்றுமுன்தினம் உயிரிழந்ததைத் தொடர்ந்து ரிஷாத் பதியுதீனின் வீட்டுக்குச் சென்ற நீதிவான், அங்கு தீப்பற்றிய அறையில் ஆய்வு நடத்தியுள்ளதுடன், சிறுமியின் மரணம் குறித்து பிரேத பரிசோதனை நடத்துமாறு பொரளைப் பொலிஸாரைக் கோரியுள்ளார்.*

*இதேவேளை, சம்பவம் தொடர்பில் வீட்டில் இருந்தவர்களிடம் வாக்குமூலங்களை பதிவு செய்துள்ள பொரளைப் பொலிஸார், மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர் என்றும் பொலிஸ் பேச்சாளர் மேலும் கூறியுள்ளார். (இ)*

## ஜோசப் உள்ளிட்ட...

இலவசக் கல்வியைப் பாதுகாக்க வேண்டும் என வலியுறுத்தி ஜோசப் ஸ்டாலின் உள்ளிட்டவர்கள் கொழும்பில் கடந்த 8ஆம் திகதி தொழிற்சங்கப் போராட்டத்தில் ஈடுபட்ட நிலையில் கைதுசெய்யப்பட்டனர்.

கொழும்பு நீதிவான் நீதிமன்றம் அன்றைய தினம் அவர்களுக்குப் பிணை வழங்கியபோதும் அவர்கள் பொலிஸாரால் கட்டாய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டனர்.

கொழும்பில் இருந்து பஸ்ஸில் முல்லைத்தீவு மாவட்டத்துக்கு அழைத்து வரப்பட்டு, கேப்பாப்பிலவு விமானப் படை முகாமில் உள்ள தனிமைப்படுத்தல் மையத்தில் அவர்கள் தனிமைப்பட்டிருந்தனர்.

இந்நிலையில், இவர்களை விடுவிக்குமாறு வலியுறுத்தி மறுநாள் 9ஆம் திகதி தொடக்கம் நேற்று வரை நாடு முழுவதிலும் தொழிற்சங்கங்கள் மற்றும் சிவில் அமைப்புகள் ஆகியவற்றின் ஏற்பாட்டில் கவனயீர்ப்புப் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டிருந்தன. நேற்றுக் காலை ஜனாதிபதி செயலகத்துக்கு முன்பாகவும் சுமார் 50 ஒன்றிணைந்த தொழிற்சங்கங்களால் கவனயீர்ப்புப் போராட்டம் நடத்தப்பட்டிருந்தது.

இதன்போது ஜோசப் ஸ்டாலின் உள்ளிட்ட தரப்பினரைத் தனிமைப் படுத்தலில் இருந்து விடுவிக்குமாறு தொழிற்சங்க உறுப்பினர்கள் ஒன்றிணைந்து கையொப்பமிட்ட ஜனாதிபதிக்கான மகஜரும் ஜனாதிபதி செயலாளரிடம் கையளிக்கப்பட்டிருந்தது.

இதேவேளை, ஜோசப் ஸ்டாலின் குழுவினரின் விடுதலையை வலியுறுத்தி கடந்த 5 நாட்களாக இணையவழி கற்பித்தல் புறக்கணிப்புப் போராட்டத்தை ஆசிரியர் தொழிற்சங்கங்கள் முன்னெடுத்திருந்தன.

பல்வேறு விதமான எதிர்ப்பு நடவடிக்கைளையடுத்து இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலின் உள்ளிட்ட 16 பேர் தனிமைப் படுத்தலில் இருந்து நேற்று மாலை விடுவிக்கப்பட்டனர். (இ)

## 1,517 பேருக்கு...

கள் என்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

இதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 2 இலட்சத்து 82 ஆயிரத்து 60 ஆக அதிகரித்துள்ளது.

அத்துடன்,கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 918 பேர் நேற்று குணமடைந்து வீடு திரும்பினர்.

அதன்படி, நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 2 இலட்சத்து 54 ஆயிரத்து 871 ஆக உயர்வடைந்துள்ளது.

இதேவேளை, கொரோனாத் தொற்று காரணமாக வைத்தியசாலைகள் மற்றும் தனிமைப்படுத்தல் மையங்கள் என்பவற்றில் சிகிச்சை பெறுபவர்களின் எண்ணிக்கை 23 ஆயிரத்து 487 ஆக அதிகரித்துள்ளது. (இ)

## யாழில் 33 பேர்...

சோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

இதில், யாழ். போதனா வைத்திய சாலையில் 6 பேருக்கும், தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் 5 பேருக்கும், வேலணை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவை சேர்ந்த 5 பேருக்கும் யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் இருவருக்கும், யாழ். மாநகர மருத்துவ அதிகாரி பிரிவு, சாவகச்சேரி மருத்துவ அதிகாரி பிரிவு, உடுவில் மருத்துவ அதிகாரி பிரிவு, பருத்தித்துறை ஆதார மருத்துவமனை ஆகியவற்றில் தலா ஒருவருக்கும் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

இதேபோன்று, பூநகரி மருத்துவ அதிகாரி பிரிவில் இருவருக்கும், உருத்திரபுரம் பிரதேச வைத்தியசாலையில் ஒருவருக்கும், கரைச்சி மருத்துவ அதிகாரி பிரிவில் ஒருவருக்குமென 4 பேர் கொரோனா தொற்றாளர்களாக இனங் காணப்பட்டனர்.

இதேபோன்று முல்லைத்தீவு - புதுகுடியிருப்பு மருத்துவ அதிகாரி பிரிவில் 5 பேர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டனர்.

யாழ். பல்கலைக்கழக ஆய்வுகூடத்தில் 266 பேரின் மாதிரிகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

இதில், பருத்தித்துறை மருத்துவ அதிகாரி பிரிவில் 7 பேருக்கும், வவுனியா மருத்துவ அதிகாரி பிரிவில் 3 பேருக்குமாக வடக்கில் 10 பேருக்கும் தொற்று உறுதிப் படுத்தப்பட்டது. இதேவேளை, பூந்தோட்டம் தனிமைப்படுத்தல் முகாமில் தனிமைப்படுத்தப்பட்ட இருவரும் தொற்றாளர்களாக இனங்காணப்பட்டனர்.

இதுதவிர, நேற்று பருத்தித்துறையில் மேற்கொள்ளப்பட்ட அன்ரிஜென் பரிசோதனையில் நால்வர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டனர். (ஐ)

## திருத்துவதற்காக...

ரினால் நேற்று முன்தினம் வியாழக் கிழமை கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் இருவரும் நேற்று யாழ்ப் பாணம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத் தப்பட்டனர். சந்தேகநபர்களின் பெற்றோர் சட்டத்தரணி க.நிசாந்தன் ஊடாக மன்றில் முன்னிலையாகி தமது விண்ணப்பத்தை மன்றுக்கு முன்வைத்தனர்.

"சந்தேக நபர்கள் இருவரும் நீண்ட காலமாக போதைப்பொருளுக்கு அடிமையாகியுள்ளனர். அவர்களை நல்லொழுக்கத்துக்கு மாற்ற பெற்றோர் பெரும் முயற்சிகள் எடுத்தும் அவை பயனற்றுப் போகின. சகோதரர்களான இருவரையும் சீர்திருத்தி சமூகத்தில் வாழ நீதிமன்றம் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும்" என்று பெற்றோர் சார்பில் சட்டத்தரணி க.நிசாந்தன் விண்ணப்பம் செய்தார்.

சந்தேக நபர்களின் பெற்றோர் சார்பிலான விண்ணப்பம் மற்றும் சந்தேக நபர்கள் குற்றச்சாட்டை ஏற்றுக்கொண்டமையை ஆராய்ந்த நீதிவான் ஏ. பீற்றர் போல், இருவருக்கும் ஒரு வருட சாதாரண சிறைத் தண்டனை வழங்கி தீர்ப்பளித்தார்.

சிறைத் தண்டனைக் காலமான ஓர் ஆண்டு காலத்தையும் சகோதரர்கள் இருவரும் மறுவாழ்வு நிலையத்தில் கழிக்க வேண்டும். இதன்படி சகோதரர்களில் ஒருவர் கந்தக்காடு மறுவாழ்வு நிலையத்துக்கும், மற்றையவரை பல்லேகல மறுவாழ்வு நிலையத்துக்கும் அனுப்பி மறுவாழ்வு வழங்க கட்டளையிட்டார். (ஐ)

## 18 வயதுக்கு...

நிகழ்வில் உரையாற்றும்போதே அமைச்சர் இவ்வாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

"நாட்டில் தற்போது ஒழுக்கம் சீர் கெட்டுப் போயுள்ளது. இதற்கு முன்னர் 18 வயதுக்கு மேற்பட்டோருக்கு இராணுவப் பயிற்சியை வழங்க வேண்டும் என்று நான் கூறும்போது, அதனை சிலர் விமர்சித்தனர். எனது இந்தக் கருத்து இராணுவ மயமாக்கல் அல்ல.

எவ்வாறாயினும் 18 வயதுக்கு மேற்பட்டோருக்கு பயிற்சியளிக்க வேண்டும் என்றால் அதற்கு இராணுவ முகாம்களே பொருத்தமான இடம். அங்கேயே அதற்கான ஒழுக்கமும், வசதிகளும் இருக்கின்றன.

இதனால் பொருத்தமான கற்கை நெறியொன்றை அறிமுகப்படுத்தி அதனைச் செய்ய வேண்டும்" - என்றார். (இ)

## அவசர கால...

பட்டுள்ளது. இதைத் தொடர்ந்தே இலங்கையும் அனுமதி அளித்துள்ளது.

இந்தத் தடுப்பூசியை பீஜிங்கை தளமாகக் கொண்ட மருந்து நிறுவனமான சினோவக் தயாரிக்கிறது. இந்தத் தடுப்பூசியை சேமிப்பது இலகுவானது. இதற்கு குறைந்த வள அமைப்புகளுக்கு மிகவும் பொருத்தமானது.

சினோவக் தடுப்பூசி 51 வீதம் செயல் திறன்மிக்கதாகக் கூறப்படுகின்றது. (ஐ)

# இலங்கையில் கொரோனா பரவலால் குழந்தை பிறப்பு விகிதத்தில் வீழ்ச்சி

கொழும்பு, ஜுலை 17

இலங்கையில் கொரோனா வைரஸ் காரணமாக குழந்தை பிறப்பு விகிதம் பாரிய அளவில் வீழ்ச்சியடைந்துள்ளது என்று சுதேச வைத்திய இராஜாங்க அமைச்சர் சிசிர ஜயகொடி தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"நாட்டில் கொரோனாத் தொற்று பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக விதிக்கப்பட்ட பயணக் கட்டுப்பாடு காரணமாக திருமண வைபவங்கள் நடக்காத காரணத்தால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது.

வருடம் ஒன்றிற்கு 3 இலட்சத்து 50 ஆயிரம் வரையில் குழந்தை பிறப்புக்கள் இடம்பெறும் நிலையில், கொரோனாத் தொற்று நிலைமையால் இந்த எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது" - என்றார்.

இதேவேளை, கொரோனாத் தொற்றுக் காலப்பகுதியில் கருத்தரிப்பதை தவிர்த்துக்கொள்ளுமாறு சுகாதார அதிகாரிகள் கடந்த சில மாதங்களில் அறிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (இ)

# வல்வெட்டித்துறை நாவலடியில் 7 பேருக்கு கொரோனா தொற்று

வடமராட்சி, ஜுலை 17

வல்வெட்டித்துறை - ஊறிக்காடு நாவலடி பகுதியில் 7 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

வல்வெட்டித்துறை ஆதிகோவிலடி பகுதியில் தொற்றாளர்கள் அதிக அளவில் அடையாளம் காணப்பட்ட நிலையில் வல்வெட்டித்துறையின் மக்கள் செறிந்துவாழும் மற்றொரு பகுதியான கெருடாவில் வடக்கு (ஜே / 386) நாவலடி பகுதியில் நேற்று அன்ரிஜென் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

எழுமாறாக, 30 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் 7 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டதாக சுகாதாரத் தரப்பினர் தெரிவித்துள்ளனர். (ஐ)

# ஈஸ்டர் தாக்குதல் சந்தேகத்தில் கைதான இருவர் விடுதலை!

மட்டக்களப்பு, ஜுலை 17

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக சந்தேகத்தில் கைது செய்யப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்ட காத்தான்குடியைச் சேர்ந்த இருவர் விடுதலை செய்யப்பட்டனர்.

அவர்களுக்கு எதிராகப் போதிய சாட்சி இல்லாத காரணத்தால் வழக்கு தொடரமுடியாது என்று சட்டமா அதிபர் திணைக்களத்தில் இருந்து அறிவிக்கப்பட்டதையடுத்து இருவரையும் இந்த வழக்கில் இருந்து கடந்த கடந்த புதன்கிழமை மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்ற நீதிவான் ஏ.சி.எம். றிஸ்வான் விடுதலை செய்து தீர்ப்பளித்தார்.

கடந்த 21. 4. 2019 உயிர்த்த ஞாயிறன்று இடம்பெற்ற தாக்குதலின் பின்னர் சஹ்ரான் குழுவோடு தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தில் காத்தான்குடியை சேர்ந்தவரும் தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராக கடமையாற்றிய ஒருவரை கடந்த 2019 ஏப்ரல் 28 ஆம் திகதியும் அவ்வாறே கடந்த 2019 யூன் 20 ஆம் திகதி காத்தான்குடியை சேர்ந்த ஒருவர் உட்பட இருவரையும் சந்தேகத்தில் கைதுசெய்து தடுப்பு காவலில் வைக்கப்பட்டனர். இவர்களுக்கு எதிராக வழக்கு தொடர போதுமான சாட்சியங்கள் இல்லை என மட்டக்களப்பு நீதிமன் றிற்கும் பொலிஸாருக்கும் அறிவிக்கப் பட்டது.

இதனையடுத்து கடந்த புதன்கிழமை மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றில் நகர்வு மனு தாக்குதல் செய்யப்பட்டு வழக்கு எடுக்கப்பட்டதையடுத்து இரு வரையும் நீதிவான் ஏ.சி.எம் றிஸ்வான் சட்டமா அதிபரின் ஆலோசனைக் கமைய விடுதலை செய்யப்படுகின்றனரென தீர்ப்பளித்தார்.

# மட்டு சந்திவெளியில் வெடிபொருள் மீட்பு

மட்டக்களப்பு, ஜுலை 17

மட்டக்களப்பு சந்திவெளி பகுதி ஆற்றங்கரை பகுதியில் இருந்து கைவிடப்பட்ட வெடிபொருள் ஒன்றை நேற்று வெள்ளிக்கிழமை மீட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இராணுவ புலனாய்வு பிரிவுக்கு கிடைத்த தகவல் ஒன்றின் அடிப்படையில் நேற்று பகல் சந்திவெளி பிள்ளையார் ஆலைய வீதியிலுள்ள ஆற்றங்கரை பகுதியில் இருந்து குறிப்பிட்ட வெடி பொருளை பொலிஸார் இராணுவத்துடன் இணைந்து மீட்டுள்ளனர்.

இது தொடர்பான விசாரணைகளை ஏறாவூர் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## கொரோனா...

ஆக அதிகரித்துள்ளது.

நேற்றுமுன்தினம் உயிரிழந்த 41 பேரில் 23 ஆண்களும், 18 பெண்களும் அடங்குகின்றனர்.

இவர்களில் 30 - 50 வயதுகளுக்கு இடைப்பட்ட 9 ஆண்களினதும், 3 பெண்களினதும் மரணங்கள் பதிவாகியுள்ளன.

அவ்வாறே, 60 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட 14 ஆண்கள் மற்றும் 15 பெண்களின் மரணங்களும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன. (இ)

## மாகாணங்களுக்...

இடைநிறுத்தப்படவுள்ளன.

கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்தும் நோக்கிலேயே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அத்தியாவசிய சேவைகளில் ஈடுபடும் ஊழியர்களின் போக்குவரத்து வசதி கருதி மாத்திரமே மாகாணங்களுக்கிடையிலான பஸ் மற்றும் ரயில் சேவைகள் கடந்த புதன்கிழமை முதல் ஆரம்பிக்கப்பட்டன.

எனினும், சுகாதார நடைமுறைகள் உரிய வகையில் பின்பற்றப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

## வடமராட்சி...

துக்கு இடமான முறையில் டிங்கி படகு ஒன்றை கடற்படையினர் சோதனையிட்டனர்.

இதன்போது, அந்தப் படகிலிருந்து 103 கிலோ கஞ்சா போதைப் பொருளை படையினர் கைப்பற்றினர். அத்துடன் படகில் இருந்த 3 பேரையும் அவர்கள் கைது செய்தனர்.

கைதானவர்கள் மூவரும் பருத்தித்துறை கற்கோவளம் பகுதியை சேர்ந்தவர்கள் என்று கடற்படையினர் தெரிவித்தனர்.

சட்ட நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காக கைதான மூவரும் காங்கேசன் துறைக்கு கொண்டு செல்லப்பட்டனர். (ஐ-2)

ஈழநாடு
Eelanadu

# ஜோசப் குழுவினரை விடுதலை செய்யக்கோரி ஜனாதிபதி செயலகத்துக்கு முன் ஆர்ப்பாட்டம்

## தொழிற்சங்க உறுப்பினர்கள் சார்பில் மகஜரும் கையளிப்பு

கொழும்பு, ஜூலை 17

தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ள இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலின் உள்ளிட்ட குழுவினரை விடுவிக்குமாறு கோரி ஒன்றிணைந்த தொழிற்சங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நேற்றுக் காலை ஜனாதிபதி செயலகத்துக்கு முன்பாக இடம்பெற்றது.

சுமார் 50 தொழிற்சங்க ஒன்றியங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தொழிற்சங்கங்கள் ஒன்றிணைந்தே இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தன.

இதன்போது ஆர்ப்பாட்டக்காரர்கள், தனிமைப்படுத்தல் என்ற போர்வையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள தொழிற்சங்கத் தலைவர்களை உடனடியாக விடுவியுங்கள், தனிமைப்படுத்தலை மையமாகக் கொண்டு மேற்கொள்ளப்படும் அச்சுறுத்தலை உடனடியாக நிறுத்துங்கள் போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறும் கோஷங்களை எழுப்பியும் தமது எதிர்ப்பை வெளியிட்டனர்.

இதன்போது ஜனாதிபதி செயலகத்தின் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டதுடன், ஆர்ப்பாட்டக்காரர்கள் ஜனாதிபதி செயலகத்துக்கு முன்பாகத் தடுத்து நிறுத்தப்பட்டனர்.



இந்நிலையில், ஜோசப் ஸ்டாலின் உள்ளிட்ட தரப்பினரைத் தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்குமாறு தொழிற்சங்க உறுப்பினர்கள் ஒன்றிணைந்து கையொப்பமிட்ட மகஜர் ஜனாதிபதி செயலாளரிடம் கையளிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து ஆர்ப்பாட்டக்காரர்களின் மத்தியில் உரையாற்றிய முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சமன் ரத்னப்பிரிய,

"ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் உள்ளிட்ட குழுவினர் கட்டாயத் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். அதேபோன்று துமிந்த நாகமுவ உள்ளிட்ட குழுவினரும் அரசின் தனிமைப்படுத்தல் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். இது ஜனநாயக அடக்குமுறையாகும்.

ஜோசப் ஸ்டாலின் உள்ளிட்ட குழுவினருக்குப் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. அதில் அவர்களுக்குக் கொரோனாத் தொற்று உறுதியாகவில்லை. இருப்பினும் அவர்கள் முல்லைத்தீவு விமானப்படை முகாமில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்" - என்றார். (இ)



# இளைஞருக்கு எமனான மாடு!

முல்லைத்தீவு, ஜூலை 17

முல்லைத்தீவு - புளியங்குளம் பகுதியில் மாட்டுடன் மோதுண்டு வவுனியா - ஓமந்தைப் பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் உயிரிழந்தார். அத்துடன் இளம் பெண் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

குறித்த இளைஞர் முத்துஐயன் கட்டுப்பகுதியில் இருந்து கண்ணிவெடி அகற்றும் நிறுவனத்தில் வேலை செய்யும் இளம் யுவதியை கொக்குத்தொடுவாய் பகுதிக்கு மோட்டார் சைக்கிளில் ஏற்றிச் சென்றவேளை புளியங்குளம் பகுதியில் எருமை மாட்டுடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளார்.

இந்த விபத்தின்போது வவுனியா - ஓமந்தையைச் சேர்ந்த 24 வயதுடைய கதிர்காமநாதன் நிலோஜன் என்ற இளைஞர் உயிரிழந்தார்.

மோட்டார் சைக்கிளில் பயணித்த யுவதி படுகாயமடைந்த நிலையில் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

விபத்து தொடர்பில் ஒட்டுசுட்டான் பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

ஒட்டுசுட்டான் - முல்லைத்தீவு வீதியில் புளியங்குளம் பகுதியில் இரவு நேரங்களில் எருமை மாடுகள் நிற்பதால் விபத்துக்கள் அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ)

# நடமாடும் தடுப்பூசி சேவை!

## உரிய அதிகாரிகளுக்கு ஜனாதிபதி பணிப்புரை

கொழும்பு, ஜூலை 17

நோய்வாய்ப்பட்டு, வீடுகளை விட்டு வெளியே செல்ல முடியாதிருப்பவர்களுக்கு, நடமாடும் தடுப்பூசி ஏற்றும் சேவையை விரைவாக ஆரம்பிக்குமாறு, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, உரிய அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

நேற்று முற்பகல், கொரோனாத் தடுப்பூசி ஏற்றுதல் மற்றும் எதிர்காலச் செயற்பாடுகள் தொடர்பில், கொரோனா ஒழிப்பு விசேட குழுவுடன், ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற சந்திப்பின்போதே, இவ்வாறு பணிப்புரை விடுத்தார்.

நாடளாவிய ரீதியில், மாவட்ட மட்டத்தில் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகள் விரைவுபடுத்தப்பட்டுள்ளன. எனினும், நோய்வாய்பட்டு, வீடுகளை விட்டு வெளியே செல்ல முடியாதிருப்பவர்களுக்குத் தடுப்பூசி ஏற்றுவது, சிக்கலாக உள்ளது.

சுகாதார மருத்துவ அதிகாரிகள், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களின் உதவியுடன் அல்லது விசேட தொலைபேசி இலக்கங்களின் ஊடாகத் தகவல்களைப் பெற்று, நடமாடும் தடுப்பூசி ஏற்றும் வேலைத்திட்டத்தை விரைவாக ஆரம்பிக்க வேண்டும் என ஜனாதிபதி வலியுறுத்தினார்.

கடந்த சில நாட்களாக இனங்காணப்பட்டுள்ள கொரோனா நோயாளிகள் மற்றும் உயிரிழந்தவர்களில் அதிக சத வீதமானோர், தடுப்பூசி பெற்றுக் கொள்ளாதவர்கள் எனத் தெரியவந்துள்ளது. எனவே, தடுப்பூசி ஏற்றுவதன் முக்கியத்துவம் குறித்தும், அது தொடர்பில் அறிவூட்டுவது குறித்தும், தடுப்பூசி ஏற்றும் நிகழ்ச்சித் திட்டத்துக்கு மக்களை உட்படுத்துவதன் அவசியம் குறித்தும் ஜனாதிபதி எடுத்துரைத்தார்.

கம்பஹா மற்றும் களுத்துறை மாவட்டங்களில் உள்ள, 30 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும், எதிர்வரும் 4 நாட்களுக்குள் தடுப்பூசி ஏற்ற முடியும் என்று அமைச்சர்களான பிரசன்ன ரணதுங்க மற்றும் ரோஹித அபேகுணவர்தன ஆகியோர் எடுத்துரைத்தனர்.

முதலீட்டு ஊக்குவிப்பு, சுற்றுலாத் துறையுடன் தொடர்புடைய வலயங்களில், தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகள், 90 சத வீதம் நிறைவடைந்துள்ளன. எனவே, குறித்த துறைகளில் விசேடமான எழுச்சியைக் காண முடியும் என அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார். (இ)

# தற்போதையநிலையில் ஆலயங்களில் திருவிழாக்களை நடத்தவேண்டும்

## பிரதமரின் இந்துமத விவகார இணைப்பாளர்



கொழும்பு, ஜூலை 17

நாட்டின் தற்போதைய நிலைமையைக் கருத்தில் கொண்டு ஆலயங்களில் திருவிழாக்கள் நடத்தப்பட வேண்டும் என்று பிரதமரின் இந்துமத விவகார இணைப்பாளர் சிவஸ்ரீ இராமச்சந்திர குருக்கள் பாபு சர்மா கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

"கொரோனாத் தொற்றுப் பரவலால் மத வழிபாட்டுத் தலங்களுக்கு விதிக்கப்பட்டிருந்த தடைகளை சுகாதார விதிமுறைகளுக்கமைய ஆலய வழிபாடுகளில் பங்கு கொள்ள வேண்டும் என்ற நிபந்தனையுடன் அரசு நீக்கியமை இந்து மக்களால் பெரிதும் வரவேற்கப்பட்ட விடயமாக இருந்தது.

இந்நிலையில், பருத்தித்துறை சிவன் கோயில் தேர்த் திருவிழாவில் கலந்துகொண்ட பக்தர்களில் 19 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. மேலும், பருத்தித்துறையின் சில பகுதிகள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

அதனைத் தொடர்ந்து மறுநாள் தீர்த்த உற்சவத்தை நடத்துவதற்கான அனுமதி ஆலய நிர்வாகத்தினருக்கும் குருமார்களுக்கு மாத்திரமே சுகாதாரப் பிரிவினரால் வழங்கப்பட்டது.

ஆலயத் திருவிழாக்களில் கலந்துகொள்ள குறிப் பிட்ட எண்ணிக்கையிலான பக்தர்களுக்கு மாத்திரமே அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதனைக் கருத்தில் கொண்டு உரிய சுகாதார விதிமுறைகளைப் பின் பற்றி கொரோனாத் தொற்றிலிருந்து பக்தர்களைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு ஆலய நிர்வாகத்தினருக்கு இருக்க வேண்டும். அத்தோடு மக்களும் பாதுகாப்பாக இருக்க வேண்டும்" - என்றுள்ளது. (இ)

# பருத்தித்துறையில் நேற்று 6 வயது சிறுமிக்கு தொற்று

வடமராட்சி, ஜூலை 17

பருத்தித்துறையில் 6 வயது சிறுமி ஒருவருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

பருத்திதத்துறை ஆதார வைத்தியசாலையில் இருந்து 6 பேரின் மாதிரிகள் நேற்று பி. சி. ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

யாழ். போதனா வைத்தியசாலை ஆய்வு கூடத்தில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் குறித்த மாதிரிகள் பரிசோதிக்கப்பட்டதில் இவ்வாறு 6 வயது சிறுமிக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டது.

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை தனிமைப்படுத்தல் விடுதியில் சேர்க்கப்பட்டிருந்த சிறுமிக்கே இவ்வாறு தொற்று உறுதி செய்யப்பட்டது. (ஐ)

# ஆறு கொரோனா தொற்றாளர்கள் பருத்தித்துறையில் தலைமறைவு!

வடமராட்சி, ஜூலை 17

பருத்தித்துறையில் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டவர்கள் ஆறு பேர் தலைமறைவாகியுள்ளனர் என்று சுகாதாரத் தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

யாழ்.பல்கலைக்கழக ஆய்வுகூடத்தில் நேற்று மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் பருத்தித்துறை நகரப் பகுதியில் வியாபார நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்ற 7 பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

இவர்களை தனிமைப்படுத்துவதற்காக சுகாதாரத் தரப்பினர் சென்றபோது அவர்களில் 6 பேர் தலைமறைவாகியிருந்தனர் என்று தெரியவருகிறது. (ஐ)




இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 17.07.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**DAN தமிழ் ஒளி**

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
7.05 மணி : உளவியல் கருத்து
7.15 மணி : கதைவழி அறமொழி-பண்டிதர் திருநாவுக்கரசு



7.30 மணி : பத்திரிகைகள் ஒரு பார்வை
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : TIK TOK
11.00 மணி : அந்தக்காலம் இந்தக்காலம் - மறு ஒளிபரப்பு

**பகல்**
12.00 மணி : வீக் என்ட் கொண்டாட்டம் (நேரலை)
1.00 மணி : மழலைகள் நேரம்-சிறுவர் நிகழ்ச்சி
1.30 மணி : WEEK END MOVIE- அரசு
04.30 மணி : காட்டூன் தமிழ்
5.00 மணி : அந்தி மந்தாரை (நேரலை)
6.00 மணி : எது சரி? எது பிழை-இலங்கையில் கல்வியில் மாற்றங்களும் தாக்கங்களும்



**இரவு**
7.00 மணி : சுப்பர் குறுாப்-இசை நிகழ்ச்சி



8.00 மணி : இரவுச் செய்திகள்
09.00 மணி: சொல்லாடுகளம்
10.00 மணி : நெற்றிக்கண்

**DAN COMEDY HD**

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

**DAN MUSIC HD**

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு துாங்கும் நேரம்

**கல்வி tv CHANNEL-1**

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**ஓம் நிதி**

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி :செய்திகள்
7.30 மணி : அருளுரை

**CHANNEL HOLY MARY**

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : அன்பின் மகிழ்வு குடும்பம்
8.00 மணி : ஜெபமாலை
9.00 மணி : இறைமகன் யேசுவின் அற்புதங்கள் (மறுஒலிபரப்பு)
09.30 மணி : மன்றாடு
10.00 மணி: நாளொரு நற்சிந்தனை (மறு ஒலிபரப்பு)
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபமாலை

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்கருணை ஆராதனை (திருகோணமரலை)
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒலிபரப்பு)
07.00 மணி : அன்றியம்

**Pirai Television**

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரீஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஜ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு